6

ஜகன்மோகினி

ஜகன்மோகினி 21வது ஆண்டுமலர்

சென்ற இதழில் நமது மலருக்கு விஷய தானம் செய்யும் 47 அறிஞர்களின் பெயர்களைப் பிரசுரித்தோம். இவ்விதழில் இன்னும் பலரின் பெயர்களைக் காணுங்கள்.

31-10-43 வரையில் தான்

இவ்வரிய பொக்கிஷம் குறைந்த விலைக்கு பதிவு செய்யப்படும்.

மலரும், சந்தாவும்	ரூ. 4—4.
மலர் மட்டும்	,, 2—4.

உங்கள் பிரதியை உடனே ரிசர்வ் செய்யவும்

62 எழுத்தாளரின் அரிய விருந்து

62 அழகிய சித்திரங்கள்

62-வது மோகினி பிரசுரம்

ஸ்ரீமதி ஸுமித்ரா தேவி

20 10
3 APR 1944
MADRAS

வை. மு. கோ. 62 வது நாவல்

JL
N43·20·10
183084

Vol. 20. No. 10. சுபானு
OCT 1943. புரட்டாசி
20 CENTS

ஆசிரியை- வை. மு. கோதைநாயகி அம்மாள்

ஸ்ரீ



அன்பர்களே!

மோகினி 21-வது ஆண்டு மலர் விஷயமாக எம்பெருமானின் கிருபா கடாக்ஷமும், உங்கள் பேராதரவும், எழுத்தாளர்களின் உத்ஸாகமும் பரிபூர்ணமாக உள்ளது சென்ற மாதத்தில் நன்கு தெளிவாகிவிட்டது. முதல் மாதத்திலேயே தங்கள் பிரதியைப் பதிவு செய்துள்ள அனைவருக்கும் எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

சென்ற இதழில் மலர் விஷயமாக வெளியான அறிக்கையைக்கண்ட பல எழுத்தாளர்கள் மிக அன்புடன் தாமாகப் பல கட்டுரைகள், கதைகள், நாடகங்கள், கவிதைகள், உண்மைச் சித்திரங்கள் முதலியவற்றை தினமும் அனுப்பிவருகிறார்கள். எல்லாவற்றையும் பிரசுரிப்பதானால் மலர், குறித்த காலத்திலோ, அளவிலோ, விலையிலோ வெளியிட இயலாதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால் சிலவற்றைமாத்திரம் மலரில் வெளியிட்டு, மிகுதியைப் பிறகு மோகினியில் வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம். ஷை அன்பர்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

எல்லாம் 62

62.வது நவீனம் வெளியாகும் மலரில் எல்லா அம்சங்களும் அறுபத்திரண்டாகவே அமையவேண்டுமென்பது எம்பெருமானின் திருவுள்ளம். கண்ணைக்கவரும் 62 அழகிய சித்திரங்கள்; உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் உயரிய கருத்துகள் அமைந்த 62 பல்வேறுபட்ட விஷயங்கள்; ஒரு முழு நவீனம் "**பிரார்த்தனை**" முதலியவை உங்களைப் பரவசப்படுத்துமென்று நம்புகிறேன்.

சென்ற இதழில், மலரை மணங்கமழச்செய்ய அன்புடன் இசைந்த 47 அறிஞர்களின் பெயர்களை வெளியிட்டோம். மற்றும் சிலருடைய பெயர்களைக் கீழே காணவும்.

ஸ்ரீமதிகள்

48. நீலாம்பிகை அம்மையார்,
49. "காசினி"
50. கி. ஸரஸ்வதி அம்மாள்,
51. "ஸமுத்ரா"
52. ஸாவித்ரி ராஜன், பி. ஏ.
53. கனகம்மாள் ஸீதாபதி அய்யர்,
54. குமாரி "பாமா"
55. குமாரி ஆர். ரங்கநாயகி.
56. பத்மா சேஷாத்ரி,
57. கமலா பத்மநாபன்,
58. நீ. ல. பட்டம்மாள்,
59. ஸ்ரீமதி ஏ. வி. ராமன்,
60. "ஜனககுமாரி"
61. செல்லம்மாள் வேலுப்பிள்ளை,

ஸ்ரீமான்கள்

62. டாக்டர் வி. சூ. நடராஜன்,
63. "ஸ்ரீரா"
64. வித்வான் கே. பி. வெங்கடகிருஷ்ணன்,
65. பி. எம். பட்டாபிராமன்,
66. எஸ். என். குப்புராஜன்,
67. ஆர். வி. சுப்ரமணியம், பி. ஏ.
68. ம. ஹென்ரி சாமுவேல்,

62 சிறந்த எழுத்தாளர்களும், 6 ஓவியக்கலைஞர்களும்—ஆகமொத்தம் 68 அறிஞர்கள் மலரை அலங்கரிப்பார்கள்.

சென்ற மாதத்தில் தங்கள் பிரதிக்கு ஆர்டர் செய்யாதவர்கள் சென்ற இதழில் வெளியான கூபனை இம்மாதம் உபயோகிக்கவேண்டும். 21-வது ஆண்டு சந்தாவும், மலரும் சேர்ந்து ரூ. 4-4-0. மலர் மட்டும் ரூ. 2-4-0.

நாளது 1-11-43 முதல் மலர் முழுவிலை 2-8-0 விதம்தான் பதிவு செய்யப்படும்.

3 APR 1944
MADRAS

ஸ்ரீராமஜயம்.

சுபானு ஹூ புரட்டாசிமீ

அக்டோபர் 1943

மலர் 20 இதழ் 10

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

JAGANMOHINI

October. 1943. Vol. 20. No. 10.



183084

ஆலிலைமேல் பாலகன்

பி.ரு

உலகங்களுக்கெல்லாம் முடிவு வந்துவிடுகிறதாம், மஹா ப்ரளயத்திலே. "ஐயோ! இத்தனை அழகுகளையும் காட்சிகளையும், புற உலகங்களையும் அக உலகங்களையும் அழித்து விடுகிறதா, ஸர்வசக்தி? என்ன பொருளற்ற—பைத்

தியக்காரத்தனமான—நாச வேலை!" என்று எண்ணக் கூடுமல்லவா? அது தான் இல்லை: முடிவு என்றால் 'அழிவு' என்பதில்லை.

இந்த இயற்கைச் செல்வங்களெல்லாம் அழியாதபடி உலகங்களை வயிற்றிலே வைத்துக்கொண்டு காப்பாற்றுகிறானும் எம்பெருமான் யுகமுடிவிலே. "அப்படியா? உலகங்களெல்லாம் அடங்கக் கூடிய அவ்வளவு பெரிய வயிறு? அப்படியானால் அந்த உருவம்தான் எப்படியிருக்குமோ? எப்பேர்ப்பட்ட மஹா மஹா விசுவரூபமோ?" என்றெல்லாம் மனம் கூசுகிறதல்லவா? புத்தி பிரமித்துப் போகிறதல்லவா? "அதுதான் இல்லை: பரம்பொருள் அந்நிலையில் குழந்தை வடிவமாகத்தான் இருக்கிறது": என்று ஆறுதல் சொல்லுகிறது புராணம்.

குழந்தையிலும் ஒரு சிறு குழந்தைதானும் அந்த மஹாரூபம். பகவத் பக்தியோடு, குழந்தைகளிடத்திலேதான் நம் முன்னோர்களுக்கு எவ்வளவு பக்தி! தெய்வத்தை மஹாப்ரளய காலத்திலும் குழந்தையாகப் பார்த்தவர்கள், குழந்தையையும் தெய்வமாகத்தானே பார்த்திருக்கவேண்டும்?

இயற்கைக்கு அதீதமான அந்த மேனியை அப்படிச் சுருக்கிக் கொண்ட போதிலும், அந்தச் சிறு குழந்தை தங்குவதற்கு இடம் வேண்டுமல்லவா? அந்த மஹாப்ரளய வெள்ளத்திலே ஆதார பூமியோ, தீவுகளோ இருக்க முடியுமா? கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் சூரிய பகவானுக்கும்கூட, நிலையுமில்லை, நீச்சுமில்லை!—என்றிருக்கும்போது, "அந்தக் குழந்தை எங்கே, எப்படியிருக்குமோ? எந்தப் படகில் எப்படி மிதந்துகொண்டிருக்குமோ?"—என்ற கவலையும் ஏற்பட்டது ஆதிபௌராணிகர்களுக்கு.

எவ்வளவு தைரியமாக அவர்கள் அந்தத் தெய்வக் குழந்தையை ஒரு ஆலிலை மேல்—ஆம், சயனிப்பதற்குச் சிறிதும் பற்றாத ஒரு ஆலந்தளிரிலே—சயனிக்கச் செய்து, அந்த ஆலிலையை அந்த மஹாப்ரளய—மஹா சமுத்திர—மஹா வெள்ளத்திலே மிதக்கப் பண்ணினார்கள்! இந்தக் கற்பனையை,

> **பாலன் தன(து)உருவாய், ஏழுல(கு)உண்(டு), ஆலிலையின்**
> **மேல்அன்று நீவளர்ந்த மெய்என்பர்:—ஆல்அன்று**
> **வேலைநீர் உள்ளதோ? விண்ணதோ? மண்ணதோ?**
> **சோலைசூழ் குன்(று)எடுத்தாய்! சொல்லு.**

[பாலன் - (இங்கே) சிறுகுழந்தை. ஏழுலகு - ஏழ்+உலகு - ஏழு உலகங்களென்று சொல்லப்படும் எல்லா உலகங்களையும். உண்டு - (இங்கே) வயிற்றிலே வைத்து. அன்று - ப்ரளயகாலத்தில். வளர்ந்த - கண் வளர்ந்த செயலை. வேலைநீர் - சமுத்திரவெள்ளம்; (இங்கே) ப்ரளய சமுத்திரம். விண் - ஆகாசம். குன்று - கோவர்த்தனகிரி. குன்று எடுத்தாய் - குன்று எடுத்த பகவானே.]
என்ற பாட்டில் **பொய்கையாழ்வார்** ஸமத்காரமாக அமைத்திருக்கிறார்.

மலையைக் குடையாகப் பிடித்த அந்த அற்புதத்திற்கும் மேலான அற்புதமாகிய இந்தக் கற்பனையும் கேவலம் கற்பனையன்று; உண்மைதான்!—என்று சொல்லுகிறார்கள் புராண முனிவர்கள். ஆனால் "அந்த ஆலிலை எந்த ஆலமரத்திலிருந்து தோன்றியதோ? அந்த ஆலமரம் எந்த அடி நிலத்திலிருந்து தோன்றியதோ? பிரளயத்தில் கரைந்துபோன மண்ணிலிருந்தா? அல்லது பிடிப்பு ஒன்றுமில்லாத விண்ணிலிருந்தா? அல்லது ஒரே வெள்ளமாய்க் கோத்துக் கிடக்கும் அந்தப் பிரளய மஹா சமுத்திரத்திலேயே வேரூன்றி, அந்த வெள்ளத்திலேயே தளிரோடி இலை வீசிவிட்டதா?" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகிறார் ஆழ்வார்.

இப்படியே கேள்விக்குமேல் கேள்வி முளைத்துச் செழித்துக் கிளைத்து இலை மேல் இலையாக வீசிக்கொண்டே போகமுடியுமல்லவா? இவைகளுக்கெல்லாம் வைதிகர்கள் சொல்லும் பதில், "ஸர்வசக்தியின் அதிமானுஷ சேஷ்டிதம்! அகடிதகடனா ஸாமர்த்தியம்!" என்பதுதான். இந்த வார்த்தைகளுக்கும் பயப்படாதவர்களை நோக்கி, "நம்பு; குதர்க்கம் பண்ணாதே: நம்பினார் நலம்பெறுவர்! இதுவே

முனிவர்களின் தீர்ப்பு; ஆழ்வார்களின் தீர்ப்பு'' என்றுதான் நம்பிக்கை சொல்லுகிறது.

வாஸ்தவம்தானே, 'சூரியன் கிழக்கில் உதிக்கிறது' என்று நாம் பார்க்கிறதுதான் மெய்யா? கற்பனைகள் உண்மையில்லையா? நம்பிக்கை எவ்வளவோ ஆறுதலையும், ஆனந்தத்தையும் அளிப்பதில்லையா?

உண்மைச் சித்திரம் — **வை. மு. கோ.**

4. முனீச்வரனுக்கு நோட்டீஸ்

திருவல்லிக்கேணியிலுள்ள நமது ஜகன்மோகினி காரியாலயத்தை அனேகர் புகைப்படத்தில்பார்த்திருக்கிறீர்கள்; சிலர் நேரிலும் பார்த்திருக்கலாம். சுமார் 12 வருஷங்களுக்குமுன்பு இதே வீடு சாதாரண ஓட்டு வீடாயும் பழய மாதிரி கட்டடமாயும் புறக்கடையில் பெரிய பாதாம்மரம், இன்னும் சில செடிகளுடனும் இருந்தது. பின்புறத்தை முற்றும் இடித்துப் புதிய மாடி வீடாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்கையில் முதலில் புறக்கடையில் வெகு காலமாகவிருந்த பாதாம் மரத்தை வெட்டவேண்டியது அவசியமாயிற்று.

இந்துக்களில் அனேகர் வீட்டில் புறக்கடைச் சாமியாருக்கு—அதாவது முனீச்வரனுக்கு— புறக்கடையிலேயே வருடத்திற்கு இரண்டு முறை ஆடிமாதமும், தை மாதமும் பொங்கலிடுவது பெரும்பாலும் வழக்கம் இன்னும் உண்டு. அதேபோல் எங்கள் வீட்டிலும் பொங்கலிடுவது வழக்கம்; நாளையும் நடைபெற்றுவருகிறது.

அந்த மரத்தை வெட்டுவதற்காக ஆட்களைக் கூப்பிட்டுக் கேட்டோம். "முனீச்வரன் வருஷக்கணக்காய் குடியிருக்கும் மரத்தை நாங்கள் வெட்டவே மாட்டோம். அது மகா பாவம். சாமி குத்தமாகிவிடும்'' என்று பயந்து கூறிவிட்டுப் போய்விட்டார்கள்.

"ஏதடா இது! வீடு கட்டும் ஆசையை விட்டுவிடத்தான் வேண்டும்போலிருக்கிறதே!'' என்று எங்களுக்குக் கவலை உண்டாகியது. தினம் விடிந்தால் அஸ்தமித்தால் மரம் வெட்ட ஆட்கள் வருவதும், பயந்துகொண்டு போவதுமாக ஒரு வாரம் கழிந்தது.

என்ன செய்வதென்று யோசனையில் மூழ்கினோம். வீட்டைக்கட்டத் தொடங்கினால் சுமார் ஆறு மாதம், ஒரு வருஷம் வேலையை இழுத்தடிப்பதும் கட்டியதை இடிப்பதும், இடித்ததைக் கட்டுவதுமாக தம் பிழைப்பிற்குச் சரியானபடி வழி தேடிவிடும் சாமர்த்திய சாலிகளல்லவா கொல்லத்துக்காரர்கள்! அதற்காக கொல்லத்து மேஸ்திரியே மரம் வெட்ட ஆட்களை வேட்டையாட ஆரம்பித்து ஒரு கிழவனைக்கொண்டு வந்தான். அவனும் பார்த்துவிட்டு இதே பல்லவியைப் பாடிவிட்டுச்சென்றான். வீட்டிற்குப் போனபிறகு என்ன தோன்றியதோ, எப்படி தீர்மானித்தானோ தெரியவில்லை. "வீடுகளில் குடியிருப்பவர்களுக்குமட்டும் வீட்டை காலி செய்ய நோட்டீஸ் கொடுக்கிறோமே. அப்படியே முனீச்வரனுக்கும் ஏன் நோட்டீஸ் கொடுக்கக்கூடாது!'' என்கிற வெகு விசித்திரமான முடிவுக்கு வந்து, மறு தினம் காலையில் புறக்கடைப்புறம் சென்று சுற்றுமுற்றும் ஒருதரம் மரத்தை ஏற இறங்கப் பார்த்தான். சிறிது நேரம் யோசனை செய்து பின், "சாமி! கொஞ்சம் கற்பூரம், சாம்பிராணி, வெத்திலைபாக்கு, பழம், தேங்காய், எலுமிச்சம்பழம், அகல் விளக்கு, காகிதம்பென்ஸல் இத்தனையும் கொண்டுவாங்க'' என்று பெரிய ஜாபிதா தயார்செய்தான்.

எங்களுக்கோ ஒன்றுமே விளங்கவில்லை. வேடிக்கையாயும் சிரிப்பாயுமிருந்தது. கிழவன் கேட்டதையெல்லாம் என் குமாரன், ஸ்ரீனிவாஸனே கொண்டுவந்து கொடுத்தான். கிழவன் வெகு பயபக்தியுடன் புறக்கடையிலுள்ள குழாயில் குளித்து, ஈரவஸ்திரத்தையணிந்து குங்குமமும் விபூதியும் இட்டுக்கொண்டு அசல் பூசாரியைப்போலானான். விளக்கேற்றி வைத்து கற்பூரம் கொளுத்தி, சாம்பிராணி தூபம் போட்டு ஏதோ வாயில் மந்திரமோ, வேண்டுகோளோ, தெரி

யாது; முணுமுணுவென்று கூறினன். மரத்திற்கு மஞ்சள் குங்குமம் இட்டு விழுந்து கும்பிடு போட்டு, காகிதத்தில்,

"அப்பனே! முனீச்வரா! நானு ஏழை. பிள்ளைகுட்டிக்காரன், வயத்துப்பொழப்புக்கு இந்த மரத்தை வெட்டப்போறேன். நீ இந்தமரத்தெ விட்டு வேறெ எங்காச்சும் சந்தோஷமாபோயிடு. எங்களெ ஒண்ணும் பண்ணாதே. காப்பாத்து. காப்பாத்து ஊட்டுக்காரங்களேயும் க்ஷேமமாவெச்சுகாப்பாத்து. கோவிச்சுக்காதே.. ஒனக்கு ஆயிரம்கும்பிடு போட்ரேன்.

கந்தன்"

என்று எழுதி பூஜையில் வைத்தான். உண்மையில் இதைப் பார்க்கும்போது எங்களுக்கும் ஒருவிதமான பக்தியும் பயமும் உள்ளத்தில் உண்டாயின. ஒருபுறம் சிரிப்பும் வந்தது. பிறகு அந்த காகிதத்திற்கு மஞ்சள் குங்குமமிட்டு மரத்தில் கட்டினன். அதையவன் கட்டும்போது அவன் கண்முன்பு மரத்தில் முனீச்வரன் ஸேவை சாதிப்பதுபோலவே தோன்றியதோ என்னவோ! கைகள் விடவிடவென்று நடுங்கியது. தேகத்தில் மயிர்க்கூச்செறிந்து வெயர்வையும் அரும்பியது. என்ன மூடபக்தி! என்ன வேடிக்கை!

"இந்த காகிதத்தை மூன்று நாளைக்கு யாரும் அவுக்காதிங்கோ...நான் பிறகு வறேன்" என்று கூறிப் போய்விட்டான். இந்த செய்கைக்குப் பிறகு எங்களுக்குக்கூட புறக்கடைப்பக்கம்போவதற்குசற்று அச்சமாகவேதோன்றியது.

மூன்றுநாள் கழித்து கிழவன் மற்றொரு ஆளை அழைத்துக்கொண்டு வாள், கத்தி, கோடாரி சகிதம் வந்து முன்பு செய்ததுபோலவே மறுபடியும் பூஜையைச் செய்துவிட்டு அவன் மனத்தில் ஏதோ பெரிய திருப்தியுடன் மரத்தை வெட்டினன்.

அதன்பிறகு அந்த இடத்தில் அழகிய கட்டடம் எழும்பி 'முதுந்த நிலயம்' என்கிற பெயருடன் வெங்கடரங்கம் பிள்ளை தெருவில் இருக்கிறது. இந்த சம்பவத்திற்குப்பிறகு எங்கு மரம் வெட்டுவதைப் பார்த்தாலும் எனக்கு பழய நினைவே உண்டாகிறது.



ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி R. ஸ்ரீநிவாஸன்

எழுதிய நவமணி மாலை (லோத்ரா பிரஸ், ராயப்பேட்டை. அணா. 12.)
லக்ஷ்மீ கடாக்ஷம் முதலிய கதைகள் (அல்லயன்ஸ் கம்பெனி, [மயிலாப்பூர். ரூ. 1—8.)

ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மியம்மாளின் எழுத்து வன்மையை ஏற்கெனவே பல பத்திரிகைகளில் படித்து ரஸித்ததோடு நமது மோகினியிலும் படித்துப் பேரானந்தமடைந்திருக்கும் உங்களுக்கு நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் தினசரி வாழ்க்கையில் நடக்கும் பல்வேறு சம்பவங்களைத் திரட்டி அவற்றிற்குப் புதிய மெருகும் சுவையும் கொடுத்து வெகு அழகாகச் சிறு கதைகள்ரூபம் சித்திரித்திருக்கிறார்கள். கதையின் சம்பவங்கள் தினசரி வாழ்க்கையில் நடப்பதாயிருப்பினும் படிக்கும்போது புதிய உணர்ச்சி உண்டாகிறது. முக்கியமாக பெண்களுக்கு அவச்யமான விஷயங்களையே கையாண்டிருப்பது மிகவும் போற்றத்தக்கது. "இனம் இனத்தைச் சாரும்" என்பதுபோல, பெண் சமூகத்திற்கே தொண்டுசெய்வது ஒரு தனித்த பெருமையும் கௌரவமுமல்லவா? உயர்ந்த குடும்பத்துப் பெண்ணாயினும் எப்படி நடக்க வேண்டுமென்கிற நியதியை ஒவ்வொரு கதையிலும் வெகு தெளிவாக விளக்கிக்

[ராப்பர் 3-ம் பக்கத்தில் தொடர்ச்சி]

கவிதை உலகம்

“மறந்தனையோ ?”

பெற்ற அன்னையென்னை மறந்தனையோ ?—கண்ணா
பிறந்த நாளில் என்னை மறந்தனையோ ?
உற்ற யசோதை காட்டும் அன்புகண்டே—கண்ணா
உன்னை பெற்ற என்னை மறந்தனையோ ?
(பெற்ற அன்னை)

தந்தை நந்தகோனுனைத் தழுவி—மண்ணைத்
தாங்கவந்த மன்னன் என்றுசொல்ல,
வந்து வந்து வண்டுசூழ் குழலாள்—உனை
வாழ்த்தும் வாழ்த்திசையில் மயக்கமுற்றே
(பெற்ற அன்னை)

கண்ணா! கஞ்சனுக்கு அஞ்சி அன்றுன்னை—நான்
கண்ணீருடன் தந்தேன் நந்தனுக்கே.
பெண்ணாய்ப் பிறந்தும் பெற்றபிள்ளையுன்னை—நிதம்
பேணி வளர்த்திடாத பேதை என்றே
(பெற்ற அன்னை)

தோழர்எல்லாம் சூழ்ந்துனை இழுக்கக்—கண்ட
தோகை நல்லார் தொட்டுனை மயக்க,
தாழிவெண்ணெய் தந்த ஆய்ச்சியர்தாம்—வந்து
தாய்போல் உனைவாரி எடுத்தணைக்க,
(பெற்ற அன்னை)

“மழலைமொழித்தேன் உண்டறியாய் நீ;—என்
மாயலீலை காணும் பேறில்லாய்;
குழலினிசை கேளா அன்னையும் நீ—என்
கோல அழகறியாதவள்” என்றே,
(பெற்ற அன்னை)

காட்டில் கன்று காலி மேய்த்து வந்து—நீ
கன்ன லின்பக் குழலிசைத்திட,
கூட்ட மாயிளங் கோகுலச்சிறுமியர்—விழி
கொண்டு காதலின்பமாலை சூட்டிட
(பெற்ற அன்னை)

பி. ஆர். ராஜசூடாமணி

தற்காலத் தமிழ் கவிதை

விமர்சனம்

வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.

1. பாரதியாரின் மந்திரச் சொல்

நமது தேசீயக் கவி சுப்ரமணிய பாரதியாரின் கவிதை தனிச்சிறப்புடையது. உணர்ச்சிப் படலங்கள், தங்கமொழிக் குமிழிகளாகவே கொப்பளித்து வருகின்றன. தமிழ்மொழி பாரதியாரின் கையில், உணர்ச்சிக் கடலை அளக்கும் அளவு கோலாகவே பிறந்துவிட்டது; அதுவே மந்திரக் கோலாக மின்னி வருகிறது. எளிய சொற்கள், புதிய சோபையுடன், மந்திரச் சொற்களாகவே பிறக்கின்றன. உணர்ச்சிக் குன்றின்மேல் பாரதியாரின் கவிதை விளையாடும்போது, தமிழ் மொழி மின்னற் சிலம்பம் வீசுகிறது: சொற்கள் சிறகடித்துப் பறக்கின்றன; இடியேறும் இடுகாடும், இறைவன் பாதத்தில் களங்கமற்று இறுமாந்த இலக்கிய ரஸனையுடன் விளையாடுகின்றன; நட்சத்திரங்கள் மலர்களாகவே மணக்கின்றன; வெண்ணிலா தனது அகண்ட வெண்மையைப் பொழிந்து உலகத்தை இன்புறுத்துகிறது; தத்துவங்கள், வாழ்க்கையின் இன்னல்களை மாற்றுகின்றன; இசைக்கொடி ஆகாசத்தை எட்டிப் பிடிக்கிறது; குழந்தையின் உள்ளத்தில் மழலை இசைகிறது; தாயின் அன்பு எல்லையற்று விளங்குகிறது; காதல் கலங்கித் தெளிந்து, புலம்பிக் குமுறி, மௌன ரீங்காரமாக உதயமாகி, கண்வலை வீசிப் பித்தர்களைப் பிடித்துக்கொள்ளுகிறது; சுதந்திர வெறியை அள்ளி வீசுகிறது; பெண் விடுதலை முழக்கம் செய்கிறது; புதுமைப் பெண்ணையும் அபூர்வமான காம்பீரிய சௌந்தரியத்துடன் பாரதியார் சிருஷ்டித்திருக்கிறார்.

'**ஊழிக்கூத்து**' என்ற சக்திப் பாடலில் பாரதியாரின் மந்திரச் சொல்லைப் பாடிப் பாடிப் பாருங்கள்:

வெடிபடு மண்டத் திடிபல தாளம்போட - வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம்பாடப் - பாட்டின்
அடிபடு பொருளுன் அடிபடு மொலியிற் கூடக் - களித்
தாடுங்காளீ, சாமுண்டீ; கங்காளி!
அன்னை, அன்னை
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

ஐந்துறு பூதம் சிந்திப்போ யொன்றாகப் - பின்னர்
அதுவும் சக்திக் கதியில் மூழ்கிப்போக - அங்கே
முந்துறு மொளியிற்சிந்தை நழுவும் வேகத் - தோடே
முடியா நடனம் புரிவாய், அடுதீ சொரிவாய்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

* * * *

சத்திப் பேய்தான் தலையொடு தலைகள் முட்டிச் சட்டச்
சடசட சட்டென் றுடைபடு தாளங்கொட்டி - அங்கே
எத்திக்கினிலும் நின்விழியனல் போயெட்டித் தானே
எரியுங் கோலங் கண்டே சாகும் காலம்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை

காலத் தொடு நிர்மூலம் படுமூ வுலகும் - அங்கே
கடவுள் மோனத் தொளியே தனியாயிலகும் - சிவன்
கோலங்கண்டுன் கனல்செய் சினமும் விலகும் - கையைக்
கொஞ்சித் தொடுவாய், ஆனந்தக் கூத்திடுவாய்,
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.''

இந்த நான்கு பாடல்களிலும் ஊழிக்கூத்தின் உறுதியான இறுதி லீலைகளையும் திருவிளையாடல்களையும், மொழிக் கண்ணுடியில் மின்னி இடிப்பதைப் பார்த்து இன்புறுங்கள். உணர்ச்சியால் வேகமாக உந்தப்பட்ட சொற்கள்,— மந்திரச் சொற்கள்—இடி இடிக்கின்றன. ஊழி இடியேறுக விளையாடுகிறது. ஊழி ஊமையல்ல; மொழி மின்னலில் விதியின் வீதி சுழன்று மின்னுகிறது; சொற்கள்,—கதறும் கர்ஜிக்கும் கவிதைச் சொற்கள், சட்டச் சடவென்று முட்டித் தாளங் கொட்டுகின்றன; தமிழ் மொழியின் விழி கனல் வீசுகிறது. இதுவே மின்னற் கவிதை, சந்தக மின்சாரம்.

ஒரு உயர்ந்த மனநிலையுள்ள கவிஞன் எழுதும் வசனமும் கவிதை மணமே வீசுகிறது; இதயத்தினின்றும் பாடிக்கொண்டு வெளிவரும் சொற்கள், காவிய கதியுடனே வசனகாவியமாகவே உதயமாகின்றன; வசன லாகவத்தில், இதயத் துடிப்பு அணி நிறைந்த காவிய மாளிகையாகவே ஜனிக்கிறது. பிரான்ஸிஸ் தாம்ஸன், நியூமன், ரஸ்கின், டிகுவன்ஸி போன்றவர்கள் எழுதும் வசன காவிய நடையைப்போல, பாரதியாரின் வசன நடையும் கற்பனை மண்டிய அணிக் கோலமாகவே உதயமாகிறது. இதனுல் நாம் அறிந்து கொள்ளும் உண்மை என்ன? உண்மைக்கவிஞனின் உள்ளத்தில், உதிக்கும் வேகம் நிறைந்த சொற்றெடர், எந்த வடிவத்திலும் கவிதையின் ஜீவகளை கொண்டது; எப்பொருளிலும் அழகையும் ஆனந்தத்தையும் அனுபவிக்கும் இளங்கவி ஜான் கீட்ஸ் (KEATS) எழுதியிருக்கும் கடிதங்களில்கூட, கவிதைப் பண்புள்ள வசன ரீங்காரத்தை நாம் கண்டு களிக்கலாம். பாரதியாரின் வசன காவியச் செல்வத்தில் சிந்தனையின் ஆழ்ந்த தேனுறு ததும்பிப் புலம்பி வருகிறது. உதாரணமாக 'காட்சி' என்ற தலைப்பின் கீழ், 'ஞாயிறு' எவ்வாறு உதயமாகிறது, பாருங்கள்:

'நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கம், நீ காட்சி
மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து - இவையெல்லாம்
கண் நினது வீடு. [நினது திகழ்ச்சி
புகழ், வீரம் - இவை நினது லீலை
அறிவு நின் குறி, அறிவின் குறி நீ
நீ சுடுகின்றுய், வாழ்க. நீ காட்டுகின்றுய், வாழ்க.
உயிர் தருகின்றுய், உடல் தருகின்றுய்,
வளர்க்கின்றுய், மாய்க்கின்றுய்,
நீர் தருகின்றுய், காற்றை வீசுகின்றுய், வாழ்க.

* * * *

ஞாயிறே, இருளை என்ன செய்துவிட்டாய்?
ஓட்டினுயா? கொன்றுயா? விழுங்கிவிட்டாயா?
கட்டி முத்தமிட்டு நின் கதிர்களாகிய கைகளால் மறைத்து
இருள் நினக்குப் பகையா? [விட்டாயா?
இருள் நின் உணவுப் பொருளா?
அது நின் காதலியா?
இரவெல்லாம் நின்னைக் காணுத மயக்கத்தால் இருண்டிருந்ததா?'

இதைப் படித்து இன்புறும்போது, ஆங்கிலக் கவிதா மேதை ஷெல்லியின் ஞாபகம் அதில் பிரதிபலிப்பது போலத் தெரிகிறது. ஷெல்லியின் கவிதைக் கடலில் நீந்திய பாரதியார் இவ்வாறு எழுதுவது ஒரு விந்தையல்ல! ஷெல்லி தனது பாடல்களுக்கு எழுதியிருக்கும் முன்னுரைகள் எல்லாம், வசன காவியப் பொன்னுரைகளே யாகும். ஷெல்லியின் 'புயல்' பாட்டில், உண்மைக் கவிதையை மந்திரச்சொல் (INCANTATION) என்று உறுதிமொழிகூறுகிறுன்.

(தொடரும்)



ஸ்த்ரீ எழுத்தாளர்கள்

9

சௌ. சுமித்ரா தேவி

நம் தமிழ்நாட்டுப் பெண்மணிகள் தமிழ்நாடெங்கும் தங்கள் அரும் பெரும் குணங்கள் மூலமும், இலக்கிய சேவை, கலை, சங்கீதம், சமூக ஊழியம், வீர தீர செயல்கள், தேசசேவை முதலிய நற்காரியங்கள் மூலமும் தமிழ்த்தாய் பெருமையுறும்படி சுடர்விட்டு விளங்குகிறார்கள். அல்லாமல் வேறுபல ப்ர தேசங்களுக்கும் சென்று அவ்விடங்களிலும் தம் தமிழன்னைக்குப் புகழ்மாலை சூட்டும்படிக்காக, தங்கள் சிற்றன்னைகள் சமானமான பரபாஷைகளில் இலக்கிய சேவையும், சமூக சேவையும், செய்து வருகிறார்கள் அல்லவா? இதற்கு உதா காரணமாக **சௌ. சுமித்திராதேவி**யை குறிப்பிடலாம். இந் நங்கை **பாத்பூர் திவான் ராஜமந்திர பிரவீண ஸ்ரீமான் ஏ. வீ. ராமனுதய்யர்** அவர்களின் மூன்றாவது புதல்வியும், **ஸ்ரீமதி ஜயலக்ஷ்மீ R. ஸ்ரீநிவாசன்** அவர்களின் இளைய சகோதரியும் ஆவார். இவருக்கு வயது இருபத்தைந்தேதான். பெங்களூர் Air Craft Factoryயில் Electrical Engineerஆகவிருக்கும் **ஸ்ரீமான். T.S. பால சுப்பிரமணியன்**தான் இவருடைய கணவர்.

இவர் மகா உழைப்பாளி. நிமிடப்பொழுதுகூட வெறுமனே இரார். திவான் மகளானாலும்கூட சமையல்வேலையிலிருந்து சமூக ஊழியத்தின் வரைக்கும் சகலமான வேலைகளையும் பக்ஷபாதமும் பெருமிதமுமின்றி ஒரே விதமாக செய்யக்கூடிய புண்ணியவதி இவர். சைகல் விடுவதிலும் திறமை வாய்ந்தவர். கார்-ட்ரைவ் செய்வதிலும் கெட்டிக்காரி. பெங்களூர் மகாராணீ கல்லூரியில், பயின்று Intermediate பரீக்ஷையில் தேறியிருக்கிறார். First Aid, Home Nursing, Girl Guide, Fine Arts, எல்லா பரீக்ஷையிலும் distinctionனில் தேறி, பல நற்சாக்ஷிப் பத்திரங்களையும், நன்கொடைகளையும் பெற்றிருக்கிறார். கன்னட பாஷையில் இவரால் எழுதப்பட்ட பல சுவைமிகுந்த ஹாஸ்யக்கதைகள் பிரசுரமாகி இருக்கின்றன. மேலும் மேலும் பிரசுரமாகவும் போகின்றன. இவரது நடை, தமிழ்நாட்டு ஹாஸ்ய எழுத்தாளர்களுள் சக்ரவர்த்தியாக விளங்கும் ஸ்ரீமான். S. V. V. அவர்களின் நடையைப்போன்றது. இவருக்கு தமிழும் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தாலும்கூட, கட்டுரை, கதைகள் எழுதும் அளவு தமிழ் வராது. சம்ஸ்க்ருத பாஷையில் பாண்டித்யமுண்டு. நல்ல சங்கீத ஞானம் பெற்றவர். வீணை வாசிப்பதிலும், பிடில் வாசிப்பதிலும், வாய் பாட்டிலும் கை தேர்ந்தவர். தையல் வேலையிலாகட்டும், சித்திரவேலையிலாகட்டும் (fine arts) மைசூர் சமஸ்தானம் பூராவும் புகழடைந்திருக்கிறார். இவருக்கு கிருஷ்ணன் மீது மிகுந்த பக்தி. லீலாவிநோதனை ஸ்ரீ கண்ணபிரானின் பல அருமையான சித்திரங்களை (in different poses) வரைந்து பங்களா முழுதும் அலங்கரித்து கிருஹத்தை கிருஷ்ணமயமாக்கி இருக்கிறார். ஆனாலும்கூட கிருஷ்ணன் படம் இன்னும்கூட சித்திரிப்பதில் இவர் அலாதி பிரேமையுடையவர். இவர் தன்

பெற்றோர்களின், மற்றும் உறவினர்களின் (life size portraits in oil painting) உண்மைவடிவமுள்ள தைலச் சித்திரங்களை, மிக அற்புதமாக வரைந்துள்ளார். ஒவ்வொரு படமும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பெறுமானது. இவருடைய தைல சித்திரங்களும் தையல்வேலைப்பாடுகளும் பல பொருட்காட்சிச் சாலைகளில் பிரதர்சனம் செய்யப்பட்டு பல நற்சாக்ஷிப் பத்திரங்களையும் பதக்கங்களையும் பெற்றிருக்கிறார்.

இவருக்கு டென்னிஸ் விளையாட்டில் நல்ல பயிற்சியுண்டு. பெங்களூர் மாதர்களின் டென்னிஸ் கிளப்பிற்கு இவர்தான் செக்ரடெரி. பொதுநல ஊழியத்திலும் இவர் தன் உடன்பிறந்த சகோதரிகளான ஜயலக்ஷ்மீ R. ஸ்ரீநிவாசன், சரஸ்வதீ சுந்தரராஜன், சாந்தா ராமநாதன் B. A., சுசீலா ராமநாதன்களைப் போலவே நிகரற்றவர்.

பராசக்தி இப் பெண்மணிக்கு தீர்க்காயுளையும், தீர்க்க சௌமங்கலியத்தையும், சகலமான மங்களத்தையும் அருளி, இவருடைய இலக்கிய சேவையும், கலைத்திறமையும், பொதுநல ஊழியமும் தழைத்தோங்கி தமிழ்நாட்டு மங்கையர்களுக்கே ஆதர்சப் பெண்மணியாக விளங்கட்டுமென்று அம்பிகையை பிரார்த்திக்கிறேன்.

ஸ்பெஷல் டிபன்

(கன்னடக் கதை)

(மூல எழுத்தாளர்:-சௌ. சுமித்ராதேவி)

(மொழிபெயர்த்தவர்:-ஸ்ரீமதி "மைதிலீ சுதா")

"அம்மா, பின்னே, வந்து, வந்து, நானு அன்னிக்கி கீழே விழுந்தூட்டு அழரச்சே அக்கா வந்து ஒரு புது பக்ஷணம் பண்ணிதரேன், இச்கூலில் சொல்லி தந்திருக்கா" என்றாளே, இப்போ பண்ணித்தரச்சொல் அம்மா! இன்னிக்கு தான் அவளுக்கு இச்கூலில்லேயேம்மா!" என்று மழலை சொற்களில் மணி மணியாக உதிர்த்தவாறு **தினகரன்** தாயாரின் காலை வந்து கட்டிக்கொண்டான்.

தயாகரன்;—போடா, போ, பித்துக்குள்ளி! த்யுமணிக்கு என்னடா வரும்? அவள் பக்ஷணம் செய்தால் அவள் அகத்துக்காரர்தான் சாப்பிடவேண்டும். நம்மால் அதை வாயில் வைப்பதற்குக்கூட முடியாது.

த்யுமணி: - பாரம்மா, அண்ணாவை. தினகர்! இருடா, நான் இப்பொழுதே உனக்கு ஒரு தமாஷ் பக்ஷணம் செய்து தரேன்.

தயாகர்—எல்லாம் எனக்குத் தெரியும். அம்மாவிடத்தில் ஒன்றிரண்டுமுறையும் கேட்டு கற்றுக்கொண்டு செய்வது.

த்யுமணி:—இல்லேடா அண்ணா! நானே செய்கிறேன் பார். எங்கள் ஸ்கூலில் எல்லாம் சொல்லிக்கொடுத்திருக்கிறார்கள். அம்மா! நீ எனக்கு ஒன்றும் சொல்லிக்கொடுக்காதேம்மா!

இதனைவதும் ரூமில் படுத்திருந்த அய்யரின் செவியில் விழுந்தது.

அய்யர்—டீ சீதா! எனக்கு வேறெந்த டிபனும் வேண்டாமென்று கிருஷ்ணனிடத்தில் (சமையல்காரன்) சொல்லிவிடு. நானும் த்யுமணி செய்யும் டிபனையே சாப்பிட்டுவிடுகிறேன். இன்றைக்கு ஆபீஸிற்கு ஸ்பெஷல் லீவ். எனக்கும் ஸ்பெஷல் டிபன்—என்றார்.

தயாகர்:—சரி; இன்றைக்கு மத்தியானம் நமக்கெல்லாம் பட்டினிதான்! அம்மா! கிருஷ்ணனை இரவு சமையலையாவது சீக்கிரம் செய்யும்படி சொல்லும்மா.

சீதா:—வெறுமனே ஏண்டா குழந்தையை பரிகாசம் செய்கிறாய்? த்யுமணீ! ஆனால் சீக்கிரம்போய் பண்ணம்மா. மணி இரண்டடிக்கப் போகிறது, நேரமாய் விட்டது, நீ அடுக்குள்ளிற்கே போனது கிடையாதே! பத்திரமாக பண்ணம்மா.

த்யுமணி:—பாரம்மா! இன்னும் அரை மணிக்குள்ளாகவே செய்துமுடித்து விடுகிறேன்—என்று சொல்லியவண்ணம் பரபரவென்று தன் அறையிலிருந்து ஒரு பருமனை புத்தகத்தை எடுத்துக்கொண்டு அடுக்குள்ளிற்கு ஓடினாள்.

ராமசந்திரைய்யர் ஆனந்தபுரத்தில் ஒரு உத்தியோகஸ்தர். அவருக்கு சீதாலக்ஷ்மி என்ற பெயருடைய பத்தினியும், இரண்டு ஆண்குழந்தைகளும் ஒரு பெண்குழந்தையும் உண்டு. பெரிய மகனான தயாகரனுக்கு பதினெட்டு வயது, அவன் காலேஜில் படித்துவந்தான். த்யுமணிக்கு பதினான்கு வருடம். அவள் ஆறுவது பாரமில் படித்துவந்தாள். கடைசி பிள்ளைதான் தினகரன்; ஏழு வயது பையன். த்யுமணி செல்லப்பெண் ஆனதினாலும், இன்னும் சிறுசு ஆனதினாலும் அவளை அவள் தாயார் ஒரு கரண்டியைகூடத் தொடுவதற்கு அவகாசமளித்துக்கொண்டிருக்கவில்லை.

''அம்மா! கிருஷ்ணனை படுத்துத் தூங்கு என்று சொல்லி அனுப்பிவிட்டேன். இல்லாவிட்டால், அவனிடத்தில் கற்றுக்கொண்டேன் என்று அண்ணா சொல்வான்'' என்று சொல்லிக்கொண்டே ஒரு கறிபடர்ந்த பாத்திரத்தைக் கையில் எடுத்துவந்தாள் த்யுமணி.

சீதா:—ஏனம்மா இந்த கறி பாத்திரத்தைக் கொண்டுவந்தாய்?

த்யுமணி:—இல்லேம்மா, இந்த பாத்திரத்தில் பண்ணட்டுமா என்று கேட்பதற்கு கொண்டுவந்தேன்.

சீதா:—அய்யோ! இதை இன்னும் அலம்பியே இருக்கவில்லையே, வெறும் கறி. அதோ உன் வெள்ளைப் புடவையெல்லாம் கறியாய் விட்டதே— என்றாள்.

இன்னும் இரண்டொரு நிமிடத்திற்குள்ளாக ஒரு அலம்பின பாத்திரத்தைக் கொண்டுவந்தாள் த்யுமணி.

சீதா:—இது ஓட்டை. இதில் செய்யாதே, அந்த அலூமினியம் உருளியில் செய்.

தயாகர்:—ஊம். அம்மாவை கேட்பதற்குப் பிராரம்பமாகிவிட்டது—என்றான் தன் அறையிலிருந்தே.

த்யுமணி:—இல்லையடா அண்ணா! எங்கள் ஸ்கூலில் இத்தகைய பாத்திரமென்று எழுதி வைக்கவில்லை. அதற்குதான் கேட்டேன்.

தயாகர்:—ஓகோ! நம்ம வீட்டிலிருக்கும் பாத்திரமனைவதும் அவர்களுக்குத் தெரியுமா என்ன? பாவம், இனிமேல் எல்லா பாத்திரத்தையும் ஒரு லிஸ்ட் போட்டுக்கொண்டுபோய் அவாளை முதல்லே கேட்டுக்கொள்—என்றான். அனைவரும் நகைத்தனர்.

மறுபடியும் ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் சர்க்கரை எவ்விடத்திலிருக்கிறது, ரவை எங்கே இருக்கிறது, கேசரி எப்படி இருக்கும் என்று கேட்டவாறு அடுக்குள்ளிற்கும் கூடத்திற்குமாக நூறு தடவை நடந்தாள் த்யுமணி. சீதம்மாள் ஓரோரு இடத்தையும் சொல்லுவது, த்யுமணி தேடிப் பார்ப்பது, மறுபடியும் கிடைத்தது என்கிறது. இவ்வாறு எல்லா சாமான்களையும் சேகரித்துக்கொள்வதற்குள் மணி இரண்டரையும் அடித்துவிட்டது.

சீதா:—த்யுமணி! பக்ஷணத்தின் பெயரென்ன என்பதைச் சொன்னால் நான் சொல்லிக் கொடுக்கமுடியும். இங்கே வா, சொல் பார்ப்போம்.

த்யுமணி:—அம்மா! நானே செய்கிறேன். செய்தபிறகு அதன் பெயரை சொல்கிறேன்.

அதற்குள்ளாக தினகரன் "அம்மா! அக்கா சர்க்கரை எல்லாவற்றையும் நிலத்தில் கொட்டிவிட்டாள்'' என்று சொல்லிக்கொண்டு ஓடிவந்தான்.

தயாகர்:—பார்த்தாயாம்மா! இப்பொழுது ரேஷன் காலம் வேறை. நாளைக்கு காத்தாலே காப்பிக்கு சக்கரை இல்லாமல்போனால் நான் காப்பியே சாப்பிடமாட்டேன்—என்றான்.

சீதாலக்ஷ்மியம்மாள் அனைவதையும் பொறுத்துக்கொண்டு சிரித்தவண்ணம் படுத்திருந்தாள். பத்து நிமிஷத்திற்கெல்லாம் என்னவோ தீசல் வாசனை வந்தது. சீதாலக்ஷ்மி என்ன என்னவென்று கேட்டதற்கு த்யுமணி 'ஒன்றும் இல்லேம்மா! ரவை கொஞ்சம் சிவந்து போய்விட்டது அவ்வளவுதான்' என்றாள்.

தயாகர்:—அந்த மொத்தான புத்தகத்தில் ரவையை தீய்க்கவேண்டு மென்று எழுதி வைத்திருக்கிறார்களா என்ன உங்கள் ஸ்கூலில்?

சீதா:—உன் காரியத்தைப் பாருடா தயாகர்! அவளை ஏண்டா வெறுமனே வதைக்கிறாய்?

மணி மூனரை அடித்தது. தயாகரனுக்கு பாடம் படிப்பதற்கு மனது கொள்ளவில்லை. "அம்மா! எனக்கு வயிறு தாளம் போடுகிறது. இன்னும் எத்தனை நாழிகை காக்கவேண்டுமம்மா?

சீதா:—த்யுமணீ! பக்ஷணம் ஆய்விட்டதோ இல்லையோ? நான் வரட்டுமா?

த்யுமணி தன் தாயார் எங்கே வந்துவிடுகிறாளோ என்று உரக்க "வேண்டாம்மா! இன்னும் ஐந்து நிமிஷத்தில் ஆய்விடும்" என்று கூவினாள். அடுக்குள்ளில் தன் தமக்கையின் காரியத்தை கவனித்துக்கொண்டிருந்த தினகரன் ஓடி வந்து தன் தமையனின் காதில் குசுகுசுவென்று "அக்கா செய்துகொண்டிருக்கும் பக்ஷணம் மஞ்சள் மணக்க பார்ப்பதற்கு ரொம்பவும் நன்றாக விருக்கிறது. அண்ணா! பின்னை அதை சாப்பிட்டால் நாம்பள் எல்லாம் மஞ்சள் நிறமாய் விடுவோமா?" என்றான். தயாகரன் இல்லையென்று தலையை ஆட்டினான்.

அய்யருக்கு பசி எடுத்தது, எவராவது டிபன் கொண்டு வருகிறார்களோ வென்று எதிர் பார்த்துப் பார்த்து போதுமாய் போய்விட்டது. இதற்குள்ளாக மணியும் நான்கு அடித்துவிட்டது. அய்யர் மெதுவாக கூடத்திற்கு எழுந்து வந்து "உ சீதா! பக்ஷணம் செய்தாய்விட்டதா போய் பார்" என்றார்.

இதற்குள்ளாக த்யுமணியும் பக்ஷணம் செய்தாய்விட்டதென்று தன் தாயாரை அழைத்தாள். சீதாலக்ஷ்மியின் சந்தோஷத்திற்கோர் எல்லையே கிடையாது. தன் செல்வப்புதல்வி ஒருவருடைய உதவியுமின்றி அடுக்குள்ளில் பக்ஷணம் செய்துவிட்டாள். தனக்கு சமானமானவர்கள் எவராவது உண்டோ என்ற பெருமிதத்துடன் தலை நிமிர்ந்தவண்ணம் அடுக்குள்ளிற்குச் சென்றாள். த்யுமணி ஒரு தாம்பாளத்தில் மஞ்சள் மணக்க ஹல்வாபோன்ற தின்பண்டத்தை வைத்துக் கொண்டு கைவிரல்களை பூ! பூ! வென்று ஊதிக்கொண்டு நின்றிருந்தாள். சீதா காபராவுடன் என்னவாயிற்றென்று கேட்டதற்கு "அடுப்பின்மீதிருந்த பாத்திரத்தை கையால் இறக்கி வைத்தேன்" என்றாள்.

"அய்யோ அடுப்பில் காய்ந்துபோன பாத்திரத்தை எவராவது வெறும் கைய்யில் இறக்குவார்களோ? இந்த இடுக்கியைக் கொண்டு ஏன் இறக்கவில்லேம்மா?" என்று சீதாலக்ஷ்மி, சிவந்துபோய் கொப்பளித்துக்கொண்டிருந்த விரல்களுக்கு தேன் தடவினாள்.

த்யுமணி:—இல்லேம்மா! ஸ்கூலில் வெறுமனே இறக்கிவிடுங்கள் என்று எழுதவைத்திருக்கிறார்கள். இடுக்கியைக் கொண்டு இறக்குங்கள் என்று எழுத வைக்கவில்லை.

சீதாலக்ஷ்மி தன் செல்வப் புதல்வியின் தெரியாத்தனத்திற்காக முணகாமல் ஸ்கூலை வைதவாறு அய்யரையும், குழந்தைகளையும் டிபன் சாப்பிடுவதற்காக அழைத்தாள்.

அய்யர் மலர்ந்த முகத்துடன் "பலே, பேஷ், த்யுமணி! டிபன் செய்து விட்டாயே! அதன் பெயரென்ன?" என்று கேட்டவண்ணம் வந்து ஒரு மணை மீது அமர்ந்தார்.

த்யுமணி:—"இதன் பெயர் 'ரவாகேசரி' என்று... அப்பா!

தயாகர்:—அம்மா, இம்முட்டுதானா? எனக்கொருவனுக்குக்கூட போதாதே. சரி, நமக்கெல்லாம் பட்டினிதான்.

த்யுமணி:—எங்கள் ச்கூலில் அவ்வளவ்வளவுதான் அளவு எழுதவைத்திருக்கிறார்கள். நானும் அந்த பிரகாரமே செய்தேன்.

தயாகரன்:—அவளுடைய கை விரல்களைப் பார்த்து 'ஓகோ' விரல்களை சுட்டுக்கொள்ளவேண்டும் என்று எழுதவைத்திருக்கிறார்களா? இதென்ன கொப்பளங்கள்? என்றான்.

தினகர்:—அம்மா! எனக்கு முதலில் பரிமாறம்மா. எனக்காகத்தானே பண்ணு.

தயாகர்:—த்யுமணீ! அதென்ன, அந்த பாத்திரத்தில் அவ்வளவு இருக்கிறதே. அதை உனக்காகவென்று வைத்துக்கொண்டிருக்கிருயா?

த்யுமணி:—இல்லையடா! பாத்திரத்திலிருந்து தட்டத்திற்கு கவிழ்த்துக் கொள்ளுங்கள் என்று எழுதவைத்திருக்கிருர்கள். இதனைவதும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. நான் என்ன செய்வது. அதிலேயே விட்டுவிட்டேன்.

தயாகர்:—ஆனல் உங்கள் ச்கூலில், பக்ஷணம் பண்ணினல் சாப்பிடு என்று எழுதவைக்கவில்லையே? நீ இதை சாப்பிடுவதில்லையா? என்று அந்த புத்தகத்தின் தாழ்களை திருப்பியவாறு உரக்கச் சிரித்தான்.

அய்யர்:—த்யுமணீ! உன் பக்ஷணத்திற்கு தித்திப்பு, உப்பு, புளி ஒன்றும் இல்லையே? மஞ்சள் வர்ணம் மாத்திரம் ஜோராகவிருக்கிறது. வாயில் போட்டுக்கொண்டால் கசப்பாக விருக்கிறதே—என்று கசப்பினல் சிணுங்கியிருந்த முகத்தை சரிப்படுத்திக்கொண்டு கேட்டார்.

தயாகர்:—இது ச்பெஷல் டிபன் அப்பா!

த்யுமணி:—அய்யோ! நான் சர்க்கரை போடுவதற்கே மறந்துவிட்டேனே, என்னம்மா செய்வது?—என்று திருதிருவென்று விழித்தாள்.

சீதாலக்ஷ்மி எல்லோர் தட்டிலும் கொஞ்சம் கொஞ்சம் சற்கரையைத் தூவி, கலந்து சாப்பிடச் சொல்லிவிட்டு "கேசரியை கொஞ்சம் அதிகப்படி போட்டு விட்டாள். அதான் கொஞ்சம் கசப்பாகவிருக்கிறது. பரவாயில்லை, குழந்தை இவ்வளவாவது செய்தாளே!" என்று சமாதானம் கூறினள்.

சர்க்கரை இருந்துவிட்டால் போதும் என்கிற தினகரன் பேசாமல் சாப்பிட்டு விட்டு "அக்கா! நன்ருகவிருக்கிறது, தினமும் எனக்கு இதை பண்ணிக்கொடுக்கிருயா?" எனறு கேட்டுவிட்டு எழுந்து சென்ருன்.

அய்யருக்கு நெஞ்சினுள் போகாவிட்டாலும்கூட செல்வப்புதல்வி செய்ததாயிற்றேயென்று அப்படியுமிப்படியுமாக கொஞ்சம் சாப்பிட்டெழுந்தார்.

தயாகரன் மாத்திரம் கொஞ்சம்கூடச் சாப்பிடாமல் பட்டினியுடன்கூட த்யுமணியைப் பரிகாசம் செய்துகொண்டு உட்கார்ந்திருந்தான்.

த்யுமணிக்கென்னவோ ஒருபுறம் இவனுடைய பரிகாசம், மற்றெருபுரம் கை விரல்களின் எரிச்சல்.

"அம்மா! அப்பா ஸ்பெஷல் டிபனிற்கு ஆசைப்பட்டதில் எனக்கு ஒன்றும் இல்லாமல் போய்விட்டது" என்றவாறு எழுந்துசென்ருன் தயாகரன்.

பஞ்சமே! நீ என்று பஞ்சாய்ப் பறக்கப் போகிருய்?

ஆகா என்ன பரிதாபக் காக்ஷி! என்ன ஆச்சர்யம்! "பொன்விளையும் நாடு" என்று பூஜிக்கத்தக்க உயர்ந்த பாரத நாடாகிய நம் நாட்டிலா இத்தகைய பஞ்சமும் பசியும் பிணியும் தாண்டவமாடுகிறது என்பதை நினைக்க உள்ளம் உருகுகின்றது. கல்கத்தாவில் பட்டினியால் வாடிச் சாகும் செய்தியைப் படிக்கும் போதும் பரிதாப ஆத்மாக்களைப் படத்தில் பார்க்கும்போதும் எவருடைய உள்ளந்தான் துடிக்காது! அந்தோ! பஞ்சமே!...கொடிய பஞ்சமே! நீ புகுந்து நிர்த்தூளி தாண்டவம் செய்து எங்கள் பாரத தேசத்தைக் கொலைசெய்ய எத்தனை நாளாகக் காத்திருந்தாய்? எத்தனை நாளாக கரம் வைத்திருந்தாய்! யுத்த வெறி பிடித்துத் தலைவிரித்தாடி, ரத்தம் ஆருய் ஓடும் தேசங்களில்கூட இத்தகைய கொடிய பஞ்சம் இருப்பதாகத் தெரியவில்லையே! பட்டணங்களில் உன் பரிபவத்திற்கு உட்பட்டு ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மண்ணெண்ணெய்க்கு ஒரு சீட்டும் அரிசிக்கு ஒரு சீட்டும் எடுத்துக்கொண்டு ஆவலோடு ஓடி கடை வாசலில் காத்துக் கிடக்கும்—சண்டையிடும்—பரிதாபத்தைக் காணமுடியவில்லையே! பஞ்சம்! பஞ்சம்! எத்திக்கிலும் கொடிய பஞ்சம்! உணவுப் பஞ்சம். உடைப் பஞ்சம். பேப்பர் பஞ்சம். எல்லாவற்றிற்கும் பஞ்சமா? நீ என்று மறைந்து நாடு க்ஷேமப்படப்போகிறது?

வை. மு. கோ.

ஸ்ரீமதி "குகப்ரியை"



ஜய ஸாகரம்

183084

"இதென்ன? ஏரியா? அல்லது சமுத்திரமா? என்று" பார்ப்பவர்கள் திகைக்கும்படி அமைந்திருந்தது அந்த நீர்நிலை. செந்தாமரை மலர்கள் காற்றிலே தலை தூக்கி நின்று விளையாடும்; கொக்கு நாரை முதலிய நீர்ப்பறவைகளும் மீன் கொத்தியும் பறந்தும் நின்றும் உலவும். மேகம்போல் கருத்த எருமைகள் அந்த நீர்நிலையின் ஒரு புறத்திலே, ஆனந்தமாய் முக்களித்துக்கொண்டிருக்கும். இந்த ஏரி இயற்கையா? செயற்கையா? என்று சந்தேகிக்கும்படி அமைந்திருந்தது,

இந்த அழகிய ஸரோவரத்தின் பெயர்தான் **ஜயஸாகரம்**. இதை யடுத்து ஒரு அழகிய சிறுகோயில், அந்தக் கோயிலின் பெயர் **ஜயதோல்**. ஆண்களும் பெண்களும் கூட்டங் கூட்டமாய் அதிகாலையிலேயே எழுந்து நீராடி, வெற்றிலை பழம், புஷ்பம், வளையல்கள், மஞ்சட்குங்குமம் இவைகளை தண்ணீரில் இட்டு பூசிப்பார்கள்.

அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள **சிவகாம்** ஜில்லாவில்தான் இருக்கிறது இந்த ஜயஸாகரம் என்னும் அழகிய ஏரி. இந்த ஏரியைப் பூசிப்பானேன்? பத்தினிக் கடவுளின் அழியாத ஞாபகச்சின்னம் அது. தமிழ் நாட்டிலே சேரன் செங்குட்டுவன் இமையத்திற் கல்லெடுத்து கண்ணகிக்கு கோயில் கட்டினான் என்று சரித்திரம் சொல்லும். ஒரு வீரமைந்தன் தன் தாயின் ஒப்பற்ற தியாகத்தின் அறிகுறியாகச் சமைத்தது இந்தக் கோயிலும் குளமும். இன்று, உலகமகா யுத்தம் தொடங்கி பர்மா பிறர் வசமானதுமுதல், அஸ்ஸாம் நாடு தவித்து நிற்கிறது, இருந்தாலும், இன்னும் யாத்திரை செய்பவர்கள் ஜயஸாகரத்தை வழிபடாமல் செல்லுவதில்லை.

* * * *

அழகிய சிறுவீடு. சின்னஞ் சிறு குழந்தைகள் இருவர் ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். நடுக்கூடத்தில் தூணிற் சாய்ந்தவளாய் பெருமூச் செறிந்துகொண்டிருக்கிறாள் அவள். அவளுக்கு வயது இருபதுக்குமேல் இரண்டொன்றுதானிருக்கும். சற்று நேரத்திற்கு ஒருமுறை வாயிற்புறத்தைப் பார்க்கும் அவள் கண்கள். இவள் யார்? யாரை எதிர்பார்க்கிறாள் என்ற கேள்விக்கு இடமே இல்லை. அஸ்ஸாம் ராஜவம்சத்தின் கடைசிக்கொழுந்து **கதாபாணி**. அவன் மனைவிதான் இந்த **ஜயமதி**.

கதாபாணி சிறந்தவீரன், அசாத்ய பலசாலி- பொதுஜனங்களின் அன்பும் ஆதரவும் பெற்றிருந்தான். இருந்தாலும், கொடுங்கோல் மன்னன், பலரையும் கொன்று, ரக்த சிம்மாதனத்தை, கதாபாணிக்கே உரிய அந்த மணிமுடியை அபகரித்த "**லாரா ராஜா** தன் கணவனை எப்படியாவது தொலைக்க வழிதேடுகிறான், என்ற செய்தி அவள் மனதைக் குழப்பிக்கொண்டிருந்தது.

அவள் கண்களினின்றும் கண்ணீர் மாலை மாலையாய்ப் பெருகி ஓடிக்கொண்டிருந்தது. மழை பாட்டம் பாட்டமாய்ப் பெய்வதுபோல, சற்றே அழுவதும் சற்றே அடங்குவதுமாயிருந்தாள் அவள். அவள் சிந்தனைகள் நெடுந்தூரம் பின்

நோக்கிச் சென்றன. அஸ்ஸாம் நாட்டின் அரசுரிமைக்காக அவன் செய்த செயல் ஒவ்வொன்றும் அவள் கண்முன் தோன்றலாயின. "ஆம்! புராணங்களிலும் கதைகளிலும் படித்ததுண்டு. கம்ஸன், முதலியவர்களைப்பற்றிக் கேட்டிருக்கிறேன். இருந்தாலும் இவன் செய்யும் அட்டூழியங்களும், கொள்ளையும் கொலையும் அவர்கள்கூடச் செய்யக் கூசுவார்கள். எத்தனை ராஜகுமாரர்களைக் கொன்றுவிட்டான். இப்படிப்பட்ட பரமதுஷ்டனை பூமிதேவி எப்படித்தான் சுமக்கிறாளோ? வீரனாயிருந்தால் நேரில் நின்று யுத்தம் செய்வான், இவன் கோழை. பலஹீனன், கபடமாகவல்லவா சூழ்ச்சி செய்கிறான். அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள், ஆனால் இன்று நம் கண்முன்னே நடப்பது அதற்கு நேர்மாறாகவல்லவா இருக்கிறது. எங்கேயோ கிடந்த நாய் இன்று அரசன்; முடிசூட வேண்டியவர்களையெல்லாம் முடித்துவிட்டான். எப்படியோ தப்பிப்பிழைத்த இவரையும் பிடிக்கச் சதியாலோசனை நடக்கிறது. ஓடிவிடுவது பெரிதல்ல. அவருடன் நாமும் போவதென்றால் அவருக்கல்லவா வீண்சுமை. தன்னந்தனியனாய்ப் போனால் எங்கேயாவது ஒளிந்து வாழலாம். என்னையும் இந்தக் குழந்தைகளையும் உடன் அழைத்துச் சென்றால் காப்பதும் கஷ்டம். எதற்கும் அவர் வந்தவுடன் எப்படியாவது வற்புறுத்தி அவரைமட்டுமாவது காப்பற்றவேண்டும்." என்று எண்ணும்பொழுது, "ஆம்! வற்புறுத்திச் செய்யச் சொல்லவேண்டியதுதான்" என்ற சொற்கள் சற்றுப் பலமாகவே அவள் வாயினின்றும் எழுந்தன.

"எதைச் செய்யச் சொல்லவேணும் ஜயா!" என்று அன்புததும்பும் குரலிற் கேட்டவனாய் அவள் எதிரே நின்றான் கதாபாணி. கார்காலத்து மேகங்களுக்கிடையே தோன்றும் மின்னல்போல கண்ணும் கண்ணீருமாயிருந்த அந்த முகத்தில் ஒரு இளநகை தோன்றி மறைந்தது.

* * * *

நடுநிசி, ஊரெங்கும் ஒரே அமைதி, சற்றுநேரத்துக்கு ஒருமுறை எங்கேயோ ஒரு மரப்பொந்தில் கோட்டான் அலறும், உலக முழுவதும் அயர்ந்து தூங்கும் அந்த நேரத்தில், அந்த சிறு வீட்டில் இரண்டு ஜீவன்கள் மட்டும் நித்திரையில்லாமல் தவித்துக்கொண்டிருந்தன. விஷயம் என்னவென்பதைச் சொல்லவேண்டியதில்லை. கதாபாணியை ஊரைவிட்டு ஓடும்படி வற்புறுத்திக்கொண்டிருந்தாள் அவள். அவன் சுத்தவீரன். கோழையைப்போல மறைந்து ஓடி ஒளிய விரும்பவில்லை. ஜயமதியின் தீர்க்காலோசனையும், அவள்சொன்ன உவமைகளும் அவன் மனதை உலுக்கின. காலத்தின் போக்கைப்பற்றியும் சிந்திக்கச் சிந்திக்க இன்னது செய்வதென்று விளங்காதவனாய் பரமசங்கடத்தில் ஆழ்ந்தான். கைக்குழந்தையையும் அவனையும் காப்பாற்றிவிட்டால் தான் இறந்தாலும் குற்றமில்லை என்பது அவள் துணிவு. குழந்தைக்குத் தகுந்த புகலிடம் தேடிவிட்டாள்; அவன் பத்திரமான இடம் சேர்ந்திருப்பான் இதற்குள். 'நீங்கள் புறப்படுங்கள்' என்று துரிதப்படுத்தினாள் அவள்.

நெடுநேர விவாதத்திற்குப் பிறகு அவன் ஒருவாறு சம்மதித்தான். மூன்றும் சாமம் என்பதைத் தெரிவிப்பதேபோல கோழி மும்முறை கூவி ஓய்ந்தது. குழந்தை ரேவதி மஞ்சத்திலே அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். கனவிலே அவள் என்ன அற்புதக் காட்சியைக் கண்டாளோ தெரியாது. அந்த மலர் முகத்திலே சிரிப்பின் மெல்லிய ரேகை படர்ந்திருந்தது. மகளைத் தழுவி முத்தமிட்டான் அவன். "உஸ்! மெதுவாக" என்று மிகவும் தணிந்த குரலில் சொன்னாள் அவள். மறுவிநாடி அவளை இருகரங்களாலும் வாரித் தழுவிகொண்டான் அவன். அவளது கண்ணீர் பெருக்கினால் அவன் தோள் நனைந்தது.

* * * *

பக்ஷி பறந்துவிட்டதென்ற செய்தி "லாரா"வைத் திடுக்கிடச் செய்தது. எப்படியாவது அவனை வசப்படுத்திவிடவேண்டுமென்று அவனுக்குப் பதவியும் கொடுத்திருந்தான். ஆனால் ஒரு வாரமாக அவனைக் காணவில்லை என்றபொழுது

"அடடா! மோசம் போய்விட்டோமே என்று தவித்தான். துரியோதனனுக்கு சகுனி வாய்த்ததுபோல இவனுக்கு எத்தனையோ துர்மந்திரிகள். "அவன் போனல் என்ன! அவள் இருக்கிருள், விசாரித்தால் தெரியாமற் போய்விடுமா!" என்ருர்கள். பிறகு கேட்பானேன். "முதலில் தூதனை அனுப்புகிறது; மரியாதையாய்ப் பதில் சொன்னல் ஆயிற்று. இல்லாவிட்டால்—? பிறகு பார்ப்போம்" என்ருன் லாரா.

வயது முதிர்ந்த ஒரு வீரன் ஜயமதியின் வீட்டிற்கு வந்து நின்ருன். வந்தவனைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தாள் அவள். பிறகு மிகவும் சாவதானமான குரலில் "கணவனைப் பிடிக்க மனைவியையே உளவு கேட்டால் சொல்லிவிடுவாளா? இதுவரையில் எந்த ஹிந்துப் பெண்ணாவது கணவனுக்குத் தீங்குவரக்கூடுமென்று தெரிந்து காண்பித்ததுண்டா? என்று உங்கள் அரசனைக் கேட்டு வா" என்ருள்.

ஏற்கனவே ஜயமதியின்மேல் அவனுக்குப் பகை. அரசனை தன்னை அலட்சியம் செய்து கதாபாணிக்கு அவள் மாலையிட்டதும், தன்னை நோயாளி என்றும் பலஹீனன் என்றும் இகழ்ந்ததும் அவன் நினைவுக்கு வர அவன் கோபம் எல்லையைக் கடந்தது. "ஓகோ! இப்பொழுதும் இவ்வளவு அகம்பாவமா? இருக்கட்டும்; இவளைச் சும்மா விடப்போவதில்லை' என்று சீறினன்.

ஜயமதியைச் சபைக்கு அழைத்துவந்து வாய் கொண்டமட்டும் திட்டினன். அவளோ சிறிதும் அஞ்சவில்லை. அவன் அதுவரையில் செய்த அட்டூழியங்கள் எல்லாவற்றையும் பலரறிய எடுத்து வீசினுள். அவ்வளவுதான். சிறையிலடைத்து இரண்டு வேளையிலும் சவுக்கடி கொடுக்கக் கட்டளையிட்டான். அவளைக் கொன்றுவிட விரும்பவில்லை.

"என்னதான் செய்தாலும் அவள் அசைவதாயில்லை. சவுக்கால் அடித்தோம். ஈட்டியினல் குத்தினேம். இரத்தம் பீறிட்டு ஓடுகிறது. துடியாய்த்துடித்து மூர்ச்சையானுள். ஆனல் அவள் வாயினின்று அவனைப்பற்றிய சொல் ஒன்று கூட வரவில்லை" என்ற செய்திதான் பிரதிதினமும் வந்துகொண்டிருந்தது.

அவன் பொங்கி எழுந்தான் "இருக்கட்டும், இவள் படும் துன்பங்கள் தெரிந்தால் காப்பாற்றுவதன்பொருட்டு எப்படியும் வந்தே தீருவான். அப்பொழுது பிடித்துவிடலாம் "என்று மனப்பால் குடித்தான் அவன். "சரி, நாளை முதல் நகரத்தின் முச் சந்தியில் நிறுத்தி அடியுங்கள்" என்ருன் அவன்.

இந்த நிலைமையிலும் அவள் வாயினின்றும் ஒரு சொல்லும் வெளிவரவில்லை. "தேவீ! பவானீ! என்னை ஏற்றுக்கொள். என் கணவனைமட்டும் காப்பாற்று" என்று வேண்டுவாள். ஊரில் எல்லோருக்கும் தெரியும். ஒருவராவது தடுப்பாருமில்லை. சொல்லுவாருமில்லை, ஏதோ சர்வசாதாரணமான சம்பவம் நடைபெறுவதுபோலப் பார்த்து நின்றனர் துர்மந்திரிகள்.

"ஒரு பெண்ணுக்கு இவ்வளவு நெஞ்சழுத்தமிருந்தால் ஒரு அரசனுக்கு எவ்வளவு இராது" என்று உறுமினன் லாரா.

விஷயம் காட்டுத் தீப்போல் பரவிற்று. கதாபாணியின் செவிகளிலும் வீழ்ந்தது. அவன் துடிதுடித்தான். "மனைவியைக் காக்காத நான் ஒரு வீரனு? அவன் கையில் நான் அகப்பட்டாலும் குற்றமில்லை. என் கண்மணியை, ஜயமதியை மீட்டே தீருவேன் என்று தன்னந்தனியாய் கிளம்பினன். நாகர்களோடு பழகியதன் பயனுக ஒரு நல்ல யோசனை தோன்றிற்று. நாகர்களுள் ஒருவனைப் போல் வேஷம் போட்டுக்கொண்டு போனல்?—ஆம்! நாகர்பர்வதத்திலே அவர்களுடன் இருந்த காலத்தில் அவர்கள் பழக்க வழக்கம், பாஷை முதலியனவெல்லாம் வந்துவிட்டதே!

* * * *

நடுப்பகல், வெயில் வெகு கடுமையாய்க் காய்ந்துகொண்டிருந்தது. ஆற்று மணலில் அவளை நிற்கவைத்து "இன்றைக்கேனும் சொல்லுகிருயா? அவன் எங்கே? உனக்குத் தெரியாமலிருக்குமா? சொல்" என்று இடிக்குரலில்

கேட்டுக்கொண்டிருந்தான் ஒருவன். சுற்றிலும் பலர் கூட்டம். அவள் மூர்ச்சித்து விழுந்து விட்டாள். முகத்திலே தண்ணீரை வாரி இறைத்தார்கள். பிரக்ஞை வரும் சமயம். கூட்டத்திலிருந்து "அம்மா! உங்கள் பதிபக்தி மிகவும் சிறந்தது தான்; இருந்தாலும் உங்கள் கணவர் வீரர்தானே. பலசாலியான ஒரு புருஷன் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளமாட்டானா? எப்படியிருந்தாலும் ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் இவர்கள் கண்டுபிடிக்கக்கூடும். நீங்கள் இந்த இளம் வயதில் ஏன் அநியாயமாய் கஷ்டப்படவேண்டும்? உண்மையைச் சொல்லி இந்த யமவாதனையினின்று மீளக்கூடாதா?" என்ற சொற்கள் கேட்டு திடுக்கிட்டாள். குரல் மிகவும் பரிச்சயமான அதே குரல், நிமிர்ந்து பார்த்தாள். எதிரே நாகர் வேஷத்தில் நின்றிருந்தான் அவன். ஒரு கணம் திகைத்தாள்.

பிறகு "ஏ நாகா! என் தலைவிதி, நான் கஷ்டப்படப் பிறந்தேன். வீணாய் அவரைக் காட்டிக் கொடுத்து அந்தப் பாபத்துக்கு ஆளாகும்படி போதிக்க வந்தாயோ! வீரர் வீரரோடு போர் புரிவார். வெற்றி பெறுவார். கோழைகளின் கபடத்தின்முன், நயவஞ்சகச் செயல்கள்முன் அவர் வீரம் என்ன செய்யும். முள்ளை முள்ளாலேதான் எடுக்கவேண்டும். இப்பொழுதும் நான் சொல்லிப் பிழைத்தாலும் அவரால் என்னைக் காக்க முடியாது. என் உடல் மெலிந்து போயிற்று. இன்னும் சில நாட்களே இந்த உலகவாழ்வு. என்னை மீட்டு அவர் அடையப்போவது ஒன்றுமில்லை. இருவரும் பிடிபட்டு, சிறையோ அல்லது மரணமோ! இரண்டில் ஒன்று நிச்சயம். அதைவிட, எங்கிருந்தாலும் இந்தச் செய்தி ஒரு நாள் அவர் செவிகளுள் விழும். அவர் "பழிக்குப் பழி" வாங்காமற் போகமாட்டார். ஏ நாகா! என்னைப்பற்றிய கவலை உனக்கு எதற்கு? நீ உன் வேலையைப் பார். போ!" என்றாள். நீர் மல்கும் கண்களுடன் கூட்டத்தோடு கூட்டமாய் சற்றுநேரம் அங்கேயே நின்றான் நாகன்.

*   *   *   *

ஜயமதி இறந்து பல மாதங்களாயின. பெரும் படையோடு வந்து லாராவை எதிர்த்தான் கதாபாணி. பயங்கரமான யுத்தம். வெற்றிபெற்ற கதாபாணி **கதாதரசிம்மன்** என்ற பெயரோடு 1684-ம் வருடம் முடிசூட்டினான். "பழிக்குப் பழி" எப்படித் தீர்க்கப்பட்டது என்பதைச் சொல்லவேண்டியதில்லை. ஆனால் இவைகளால் அவள் அடைந்த பயன் என்ன?—பத்தினிக்கடவுளாய் அவள் விழ்ந்து இறந்த அந்த இடத்திலே. தன் தாயின் பெருமையை விளக்க அவள் செல்வப்புதல்வன் **ருத்ரசிம்மன்** கட்டிய ஸரோவரம்தான் ஜய ஸாகரம்.

இன்று பர்மாவிலிருந்து தப்பி கால்நடையாய் நூற்றுக் கணக்கான மைல்கள் மலைகளில் ஏறியும் இறங்கியும் வந்த பலருக்கும் **நாகர்** என்ற மலைச் சாதியார் தண்ணீர் கொடுத்தும் வழிகாட்டியும் உதவி செய்திருப்பது பலரும் அறிந்த விஷயம்.

"இனியன்"

நீதி சாரம்

1. மாட்டுப்பெண் தன் மாமியாரைக் "கன்னா பின்னா" என்று பேசி அழவைக்கிறாள். ஆனால் அவளே தான் மாமியாராகும்பொழுது, தன் மாட்டுப் பெண் பேசினால் வந்துவிடுகிறது மூக்குக்குமேல் அந்த பத்ரகாளி ஸ்வரூபம். ஏன்...சற்று பொறுமையோடு இருந்தால்...

2. தன் சிநேகிதனுக்கு நாவலைப் படிக்கக் கொடுக்கவில்லையே என்று மனஸ்தாபமேற்பட்டு, அதனால் ஏற்படும் சம்பவங்களையே ஒரு நாவல் எழுதி விடலாம்போன்றிருக்கு. கொடுத்தாலோ, சிநேகிதனுக்குச் சிநேகிதன்...அவனுக்கு சிநேகிதன்...என்று இப்படியே போய்க் கடைசியில் "பணத்தை வாங்கிக்கொள்ளேன்..." என்ற தோரணையிலேயே சிநேகிதன் பேசிவிடுகிறான். இந்த இருதலைக் கொள்ளி எறும்புக்கு என்ன செய்வது?

ஆதிமூல மென்றயானைக் கருள்புரிந்தாய் போற்றி
ஆதியந்த ரஹிதனை ஆராமுதே போற்றி
வேதமூல மானநித்ய வித்தகனே போற்றி
மாதவத்தின் மாமணியே ! மாதவனே போற்றி.

என்கிற பாடலை முணுமுணுத்துக்கொண்டு படுத்திருக்கும்போது அங்கு திடும்பிர வேசமாக வந்து நின்ற பேபியைப் பார்த்து வியப்புடன், "யாரு ! பேபியா ! இந்த ராத்திரியில் பேபியா வந்திருக்கிருள் !'' என்று பேபியின் தாயார் அலறுவதுபோல் கேட்டாள். அந்தம்மாள் எப்போதுமிருப்பதுபோல் நாகரீக அலங்காரம் எதுவுமின்றி வெகு சர்வ சாதாரண மனுஷியாய் காணப்பட்டதையும் வீட்டில் பழய தடபுடல் சோபை ஒன்றுமின்றி ஏதோ பாழடைந்ததுபோல் தோன்றுவதையும் கண்ட பேபிக்கு தூக்கிவாரிப்போட்டது. "என்னம்மா அப்படிக் கேட்கிருய்! நான் என்ன உனக்கு அடையாளம் தெரிய வில்லையா ! நீதான் தற்போது அடையாளம் தெரியாது ஒரு நாட்டுப்புறத்து மனுஷிபோலிருக்கிருய். ஏன் இந்த வேஷம்?''...என்று ஆச்சரியமும் ஆவலும் ததும்பக் கேட்டாள்.

தாயார்:—அது கிடக்கட்டும். இந்த நடுநிசியில் நீ எப்படி வந்தாய் ? இப் போது ரயில் ஏது ? உன் கணவரும்கூட வந்திருக்கிருரா !

பேபி:—(கோபமும் துக்கமும் த்வனிக்கும் குரலில் பேசத்தொடங்கி) ஆமாம்... என்னை இளையாளாகத் தேடித் தேடிக் கட்டிக்கொடுத்த பெருமைக்குக் கண வனும் கூட வருவான். அப்படி அவன் வருவதாயின் நான் ஏன் இந்த நிசியில் வரவேண்டும்? கதை ஏதோ விபரீதமாகிவிடும்போலத்தானிருக்கிறது. (நடந்ததைக் கூறி) இம்மாதிரி அந்தப் பித்துக்குள்ளிக்கு மூளை கலங்கிவிட்டது. மனைவிக்குப் பிடித்த பயித்தியம் அவனுக்கும் பிடித்துவிட்டதோ என்று சந்தேகமாகவே இருக் கிறது. அதனுல்தான் நானே காரை ஓட்டிக்கொண்டு வந்துவிட்டேன். இனி என்னுல் அவனுடன் இருக்கமுடியாது. அவன் தன்னந்தனியாய் எனக்கு அடங்கி நடக்கும் முறையில் மாறினலன்றி ஒருபோதும் இருக்கவே முடியாது'', என்று அழுகையும் விம்மலும் ஆத்திரமும் தாண்டவமாடக் கூறினுள்.

இதைக் கேட்ட தாயாரின் தலையில் இடி இடித்தமாதிரி ஆய்விட்டது. "ஐயையோ ! அடி பாவிப்பெண்ணே ! குடி முழுகிவிட்டதே... என்ன செய்வது ? உன்னுல்தான் உன் தந்தைக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து நீங்கலாம் என்று நினைத்து மனக்கோட்டை கட்டி முடிவதற்குள் பாவிப் பெண்ணே ! அதை தவிடு பொடியாக்கிவிட்டாயே...

இவ் வார்த்தைகளைக் கேட்டதும் நடுநடுங்கிப்போய் "என்ன! என்ன! என் தந்தைக்கு ஆபத்தா!...ஆபத்தா...என்ன ஆபத்து. உடம்பு சரியில்லையா... ஐயோ...சொல்லும்மா''...என்று பதறினுள்.

தாயார்:—உம்...உடம்பாக இருந்தால் டாக்டரிருக்கிருன். அதுவும் மிஞ்சி னுல் தலைவிதி இருக்கிறது, இரண்டுமில்லை. விஷயம் விபரீதமாகிவிட்டது. உன் பிதா முற்றிலும் நாகரீகம் நாகரீகம் என்று அந்தச் சுழலில் தானும் திளைந்து குளவி தன்னிறம் ஆக்குவதுபோல் நம்மையும் மூழ்கச் செய்ததில் குடும்பமே படு குழியில்...ஏன்...நடுக்கடலில் மூழ்கும் நிலைக்கு வந்துவிட்டது. உண்மையில் உன் தந்தை ஏராளமாகச் சம்பாதிக்கிருர்; சிக்கனமாக மிச்சப்படுத்தித்தான் ஆடம் பரமாக வாழ்க்கை நடத்துகிருர் என்று சத்தியமாக எண்ணி இருந்தேன். உன் கல்யாணத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் செலவழித்துச் செய்த வள்ளலெல்லாம்இப் போது வெளியாகிவிட்டது. அவர் பாங்கி உத்யோகஸ்தராகையால் பாங்கிப் பணத்தில் கைவைத்துத்தான் வந்த விருந்தினருக்கெல்லாம் பரிசுகள் புடவையும் ரவிக்கையுமாக வழங்கி சம்மந்தி வீட்டாருக்கும் கை கூசாது செய்து பொம் மலாட்டம் ஆடி வெகு சமீபத்திலேயே கையும் களவுமாக அகப்பட்டுவிட்டார். இனி தப்புவதற்கு வழியே இல்லை என்றும் அவர் நடத்திய ஆடம்பர வாழ்க்கை

யின் ரகஸியம் முற்றும் கடன் என்கிற கட்டடத்தின் மேல்தான் நடத்தினர் என்றும் இப்போது வெட்டவெளியான பிறகு எனக்கு ஆடம்பரமென்ன, நாகரீகமென்ன. அலங்காரமென்ன வேண்டியிருக்கிறது ?

விஷயம் வெளியாகியதும் விஷத்தைக் குடித்து உயிர் விடுவதற்குத்தயாராகி விட்டார். என் மனது தத்தளிக்கிறது. இந்த பரிபவத்தைச் சகியாது உன் அண்ணன் எங்குதான் ஓடிவிட்டானே தெரியவில்லை. எப்படியாவது உன்னிடம் ரகஸியமாக வந்து, உண்மையில் ஏராளமான பணத்தை வைத்துள்ள உன் கணவனை வேண்டி உதவி செய்யச் சொல்லலாம் என்று ஒரே ஒருஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்போலிருந்தேனே ! அதுவும் உன்னுடைய பாழாப்போன நாகரீகத் திமிரில் அறுந்துவிட்டதே... என்ன செய்வேன் ?

அசல் பணத்தையாவது ரகஸியமாகக் கட்டி அதிக தண்டனை இன்றி தப்பிக்க முடியுமா என்று என் மனது அடித்துக்கொள்கிறது. இச் சமயந்தானு நீயும் இப்படி முறித்துக்கொண்டு வரவேண்டும் ? உங்க அப்பன் கொடுத்த செல்லமும் நாகரீகப் பழக்கமும்தானே உனக்கு இத்தனை அசுர தைரியத்தைக் கொடுத்தது? இது விஷயம் வெளியில் தெரிந்தால் மற்ற கடன்காரர்களும் ஒரே காலத்தில் படையெடுத்துவிடுவார்களே... என்ன செய்வது ?'' என்று கண்ணீர் பெருகக் கதறினள்.

இதைக் கேட்ட பேபியின் உயிர் உடம்பிலிருக்கிறதா என்கிற சந்தேகம் உண்டாகிவிட்டது. அவளால் நம்பவே முடியவில்லை. "பாங்கியின் பொருளைக் களவாடியா ஆடம்பர விவாகம் செய்தார்கள்... ஐயோ ! இதென்ன பேரிடி இடித்துவிட்டது !'' என்று நிலைகலங்கி அப்படியே நின்றுவிட்டாள். பிறகு சற்று நிதானித்து, அம்மா !... இவைகளெல்லாம் உண்மையா... நிஜமாக உண்மையாய் நடந்ததா ! என்னுடைய ஆத்திரம் ஒருபுறம் இருக்கட்டும். என் கன்னத்தைப் பாரு. இத்தகைய தழும்புகள் எழும்படி அடித்த என் கணவனுக்கு உண்மையில் முன் மனைவியைப்போல் பயித்தியந்தான் பிடித்துவிட்டது. அந்த பயித்தியத்துடன் யாரால் வாழமுடியும் என்கிற பயத்தாலல்லவா நான் ஓடிவந்தேன். வந்த இடத்தில் இத்தகைய பயங்கரச் செய்தியா காதில் விழவேண்டும் ?...

தாயார்:—அடிப் பேதையே !... பயித்தியமா ! யாருக்குப் பயித்தியம். உன் மூத்தாளுக்கா பயித்தியம். நானும் அப்படித்தான் முதலில் நினைத்தேன். உன் விவாகத்திற்கு முன்பு நானும் அப்பாவும் நடேசன் வீட்டிற்குக் கல்யாணம் சொல்லப் போனபோது அங்கு அதே பெண்தான்-எனக்கு நன்ருகத் தெரிந்தது-உட்கார்ந்திருந்தாள். எங்களைக் கண்டதும் திடீரென்று ஓடி மறைந்துவிட்டாள். என் சந்தேகத்தை நிவர்த்திக்கும் பொருட்டு மிஸஸ் நடேசனைக் கேட்டதற்கு, யாரோ பரதேசி என்றும் வெகு இனிமையாகப் பாடுகிருள்; அவளுடைய மதுர கீதத்தில் மக்கள் மெய்மறந்துவிட்டதாயும் அவள் கணவன் சண்டையில் சேர்ந்துவிட்டதாயும், அனைதைப் பரதேசியாக ஆதரவின்றித் தவிப்பதாயும், தான் ஒரு அனுதை நிலையத்தில் சேர்க்கப்போவதாயும் கூறினள்.

அப்போதுதான் எனக்கு உண்மை தெரிந்தது. அவளுக்கு உண்மையில் பயித்தியமில்லை. தன்னழகு குறைந்ததால் கணவன் தள்ளிவிட்டபிறகு தான் எப்படி இருந்தால் என்ன என்று இப்படியோர் கட்டுக்கதையைக் கூறியிருப்பதாக உணர்ந்தேன். கலியாணம் நாளைக்கென்ருல் இன்று எப்படி நிறுத்துவது என்றுகூட யோசித்தேன். தானகவே தள்ளிவிட்டு வேறு மணம் செய்துகொள்வதால் ஒன்றும் கஷ்டம் நேர்ந்துவிடாது என்று அப்பாவும் நானும் துணிந்து இக் காரியத்தைச் செய்தோம். உனக்குக்கூட இது தெரியக்கூடாதென்று சொல்லாதிருந்தேன். பயித்தியமாக நடித்தால்தான் தன்னை வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிடுவார்கள் என்று அந்தம்மாள் எண்ணி மகா பொறுமையுடன் செய்திருக்கவேண்டும் என்பதை நினைத்தால் மயிர் சிலிர்க்கிறது. இச் செய்தி உன் கணவனுக்கும் தெரியாதென்று நினைக்கிறேன். அதோடு நீயும் இப்படி அனியாய

மாய் சண்டைசெய்துகொண்டு வந்துவிட்டாயே! அந்த மனிதன் தன் குழந்தையின் போஷணைக்காக மனைவியைத்தேடி அழைத்துக்கொண்டு வந்துவிட்டால் உன் கதி என்ன ஆவது? உன் தந்தைக்கு இத்தகைய அவமான மேற்பட்டு விட்டதையறிந்து உன்னை அடியோடு சேர்க்கமாட்டேன் என்று தள்ளிவிடவும் இடம் உண்டாகிவிட்டதே! இப்போது என் நிலைமையல்லவா தர்ம சங்கடத்தில் மாட்டிக்கொண்டது. பேபி! இப்போதும் ஒன்றும் பாதகமில்லை. நீ தற்சமயம் உன் பிதாவைக் காப்பாற்றவேண்டுமாயின், நீயும் உலகத்தவரைப்போல் மான மாக வாழவேண்டுமாயின் இங்கு வந்தது தெரியாமல் இப்போதே போய்விடு. உன் புருஷனின் மனம் கலங்கிவிட்டால் ஏற்கெனவே உள்ள அதிர்ச்சியில் பயித்தியம் பிடித்துவிடுமோ, மூர்க்கத்தனமாக மாறிவிடுமோ! என்று பயமாக விருக்கிறது. பேபி! புருஷர்கள் எப்போதும் உயர்ந்த பதவியில்தானிருப்பார்கள். நானும் இதுபரியந்தம் கபோதியாய் காலந்தள்ளிவிட்டேன். நீ உன் கணவனிடம் அடங்கி மரியாதையாய் பயபக்தியுடன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அந்தப் பரதேசிக் குழந்தையைக் கனிகரத்துடன் கவனித்து வா! இதனால் ஒன்றும் குறைந்துவிடாது. முதலில் உன் கணவனின் காலில் விழுந்து மன்றாடி கெஞ்சி உன் பிதாவுக்கு நேர்ந்துள்ள ஆபத்தைத் தீர்த்துக் காக்கும்படிக்கு சொல்லு. இச் சமயம் அவரும் நீ செய்துள்ள முட்டாள் காரியத்தினால் கோபமடைந்து கை விட்டுவிட்டால் அப்பாவைப் பிணமாகத்தான் பார்க்கலாம்—என்று சொல்லிக் கொண்டு வருவதைக் கேட்டு மனது கலங்கித் தவிக்கும் பேபி சில விடைகள் ஒன்றுமே தோன்றாது தடுமாறினாள். "அப்பா எங்கேம்மா?" என்ற கேள்வி வெகு நேரம் கழித்து இப்போதுதான் கிளம்பியது.

இதைக்கேட்ட அவள் தாயார் "ஐயோ! அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறாய்! தப்பு காரியம் செய்யும்போது இல்லாத அவமானம் இப்போது வந்து விட்டது. ஆபீஸில் இவருடைய பதவியின் கண்ணியத்திற்காக ஒரு வாரம் கெடுவு கொடுத்திருக்கிறார்கள். அதற்குள் அந்த பணத்தை இரண்டாம் பேர் அறியாதபடி கட்டினால் மானமாக மறைந்துவிடுமென்றும் இல்லாவிட்டால் கேஸ் போட்டுவிடுவதாயும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அதற்காக கிராமத்திற்கு நேற்றுதான் போனார். என் பாழாய்போன நாகரீகத்தின் பகட்டில் நகைகளையெல்லாம் வெறுத்துவிட்டு நாசூக்காக ஒன்றிரண்டுமட்டும் போட்டுக்கொண்டிருந்தால் இவைகளின்மூலம் பெருந்தொகை எப்படிக் கிடைக்கும்! பங்களா முதல் கார் உள்பட சகலத்தையும் விற்றுக் கட்டினாலும்கூட எல்லாக் கடனும் தீர்க்கமுடியாது போலிருக்கிறது. பேபி! வீணாக அழுது இனி பயனில்லை. இந்த படாடோபத்து வாழ்க்கையின் பரிபவம் போதும். நீதான் எப்படியாவது உன் தகப்பனாரைத் தப்பவைக்கவேண்டும். வேறு வழியில்லை. நிறைய நகைகள் உயர்ந்த விலையில் செய்து வைத்துக்கொள்ளாததின் சிறுமை இப்பொழுதுதான் தெரிகிறது. பேபி! மணியாகிவிட்டது. நீ அசட்டு தைரியத்துடன் வந்ததுபோல் போகாதே. நமது ட்ரைவர் அண்ணாசாமியை அழைத்துக்கொண்டுபோய் நீ உன் கணவனின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு உன் தந்தையைக் காப்பாற்று. இச்சமயம் உன் ஸ்ரீமத் கம்பீரத்தைப் பார்க்காதே. நம் நாகரீக மோகத்தை வெட்டித் தள்ளி எரித்துப் பொசுக்கி சாம்பராக்கிவிட்டு நம் இந்து தர்மத்தின் மேன்மைப் படிக்குக் கணவனுக்குக் கீழ்படிந்து தேனும் பாலும்போல் வாழ்க்கை நடத்து. அந்த ஞானம் எனக்கு இத்தகைய செருப்படி கிடைத்தபிறகுதான் உதயமாயிற்று. ஆகையால் நம் நாட்டு உதாரணப் பெண்களைப்போல் நீயும் நடந்துகொள்ளு. பேபி!...'மக்களுக்குச் சத்ரு மாதா பிதா' என்றபடி நாங்கள் பாழாகியதுமன்றி உன்னையும் பாழாக்கிப் பெண் குணமற்றப் பேயாக்கிவிட்டோம். போனது போகட்டும். இனியாவது ஒழுக்கத்துடன் சிறந்த முறையில் நட...உம்... இப்போதே கிளம்பு"...என்று கண்ணீர் பெருகக் கெஞ்சினாள்.

பேபியின் பாடுதான் தற்சமயம் த்ரிசங்குச் சொர்க்கமாக ஆய்விட்டது. தான் அத்தனை பிகுவுடன் அலக்ஷியமாக வந்துவிட்ட பிறகு அவளிடம் தானாகவா

போவது என்கிற எண்ணம், தாயாரின் கர்ப்பத்திலிருக்கும் நாள் முதல் ரத்தத்தில் ஊறியிருப்பதால் அது சற்று தலை தூக்கியாடவாரம்பித்தது. தந்தையின் வாழ்வு திடீரென்று பாதாளத்திற்கு இறங்கி விட்டதால் இனி தான் தாயார்வீட்டிலிருந்தாலும் தனக்குமுன்மாதிரியான சலுகை ஏதும் இல்லை என்பதும் மனத்தில் படாமலில்லை. தகப்பனார் குற்றவாளி என்று உலகமறிய அவமானமடைந்துவிட்டால் அந்த வடு ஆறவே ஆருதே. என்ன செய்வது ! என்கிற குழப்பமும் வதைக்கிறது. சற்றுநேரம் போராடியபிறகு "அம்மா ! அப்பாவைப் பார்த்து தைரியம் கூறிவிட்டுப் போகிறேனே" என்ருள்.

தாயார்:—பேடீ ! வேண்டாம். நீ கூறும் தைரியம் எல்லாம் உபகாரம் செய்து காட்டிவிடு. இரவு தங்காதே. வந்தது தெரியாது போய்விடு. நான் இந்த

ஆபத்துக்களையெல்லாம் கடிதமெழுதி நேரில் ஆளிடம் உன் பின்னலேயே அனுப்பிய பிறகே நீ அறிந்ததுபோல் காட்டிவிடு... உம்.. கிளம்பும்மா! பேபி! என்று கெஞ்சினாள்.

பேபிக்கென்னவோ மனது சமாதானமடையவில்லை. தத்தளிக்கின்றது. செய்வதறியாது குழம்பியபடியே கிளம்பிவிட்டாள். பலவிதமான உணர்ச்சிகள் அவளை வதைப்பதால் செய்வதறியாது வண்டியில் அவள் சரீரம் ஒரு பதுமை போல் செயலற்றுச் சாய்ந்தது.

43

நாட்டுப்புறத்தில் வருஷந்தோறும் ஊரிலுள்ள குடி ஜனங்கள் ஒன்று சேர்ந்து தெருக்கூத்து ஒன்று தயார் செய்து நடு வீதியில் சிறிய பந்தலமைத்து அதில் மண்டைவிளக்கின் உதவியினல் கூத்து நடத்துவார்கள், நந்தம்பட்டி என்கிற க்ராமம் குடிவளம் நிறைந்த நடுத்தரமானது. அதில் மார்க்கண்டேயன் சரித்திரத்தைத் தெருக்கூத்தாக நடிப்பதால் கூட்டமாக நடுத் தெருவுகளில் கோணிகளையும் தென்னை ஓலைகளையும் விரித்துக்கொண்டு ஏராளமான ஜனங்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

கார் கொஞ்ச தூரத்தில் வரும்போதே மண்டை விளக்கின் வெளிச்சத்தையும் ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தையுங் கண்ட ட்ரைவர் "அம்மா! இங்கு ஏதோ தெருக்கூத்து நடக்கிருப்போலிருக்கிறதே. ஜனங்களைக் கலைத்துக்கொண்டு தானே கார் போகவேண்டும். என்ன செய்வது! இந்த வழியினல் சென்றல் சீக்கிரம் போய்விடலாம்என்று இப்படி வந்தேன்'' என்று மெல்லக் கூறினன்.

பலவித யோசனைகளால் உள்ளம் குழம்பிப் போய் நிலை தடுமாறி உட்கார்ந்திருக்கும் பேபியின் காதில் இது விழவே இல்லை. இத்தகைய காலம்கூடத் தனக்கு வருமா என்கிற பேரிடியில்உள்ளம் உலர்ந்து போயிருந்ததால் கட்டை போல் உட்கார்ந்திருப்பவளை ட்ரைவர் மீண்டும் பார்த்து, "அம்மா! இந்தக்

கூட்டம் கலைந்தாலொழிய நாம் போகமுடியாதே என்ன செய்வது? நீங்கள் இப்படி உட்கார்ந்திருங்கள்; நான்போய் ஓரமாக உள்ள ஜனங்களை அப்பா தாயே! என்று வேண்டி ஒதுங்கவைக்கிறேன்'' என்று கூறி இறங்கிப்போனான்.

அதன்பிறகுதான் பேபி அங்குள்ள கூட்டத்தையும் ஆரவாரத்தையும் கவனித்தாள். அப்போது தெருக்கூட்டத்தில் எமலோகத்தின் தர்பார் சீன் நடக்கிறது. பார்ப்பதற்கு வெகு பயங்கரமாக எமதர்மராஜன் கொலு வீற்றிருக்கிறான். சித்திரகுப்தன் கணக்கு ஒப்புவிக்கிறான். எமதூதர்கள் அந்தந்த கணக்கின்படி பாபாத்மாக்களை இழுத்துவந்து நிறுத்தி அவரவர்கள் செய்த பாபத்தைக்கூறி, தண்டனைகளைச் சொல்லும் காட்சி வெகு பயங்கரமாக நடந்துகொண்டிருந்தது.

அந்த கூச்சலைக்கேட்ட பேபிக்கு உள்ளம் நடுங்கியது. ஏதோ ஒருவிதமான பயம் அவளைப் பிடித்து ஆட்டும் அதேசமயம் நாடகத்தில் ஒரு பெண்ணுருவத்தைக்கொண்டு நிறுத்தி "இந்த மகா பாவி, தான் பெற்ற குழந்தைகளைக்கூட வஞ்சனைசெய்து அவர்களுக்கான ஆகாரத்தைத் தன் ஆசைநாயகனுக்குக் கொடுத்த சண்டாளி'' என்று தூதன் சொன்னான்.

எமதர்மராஜன் பெரியதோர் கர்ஜனை செய்தவாறு "இந்தச் சண்டாளியை சுண்ணாம்புக்காளவாயில் போட்டுப் புரட்டுங்கள்'' என்று உத்தரவிட்டான், அடுத்தாற்போல் ஒரு ஸ்த்ரீயைக் கொண்டுவந்து நிறுத்தி "இந்தச் சண்டாளி பெரிய செல்வத்தில் பிறந்த திமிருடன் செல்வத்திற்கே அடிமையாகி தன் மதத்தையும் தான் வணங்கும் தெய்வத்தையுங்கூட மறந்து கண்டபடி நாகரீக மோகத்தில் மூழ்கி, செய்யத் தகாத அக்ரமங்களைச்செய்து மாம்ஸாதி பக்ஷியங்களைத் தின்று கட்டிய கணவனை தான்தொழும் தெய்வமாக நினைக்காமல் அவனை உதாசீனம்செய்து அலக்ஷியம் பண்ணி அவன் உள்ளம் கொதிக்கச்செய்து ஊதாரியாய்த் திரிந்த கொடும்பாவி'' என்று சித்திரகுப்தன் கணக்கு ஒப்புவித்தான்.

அந்த ஸ்த்ரீ கோ வென்று ஓலமிடுகிறாள். ஏமதர்மன் தன் கையிலுள்ள ஆயுதத்தை ஆட்டியும் நீட்டியும் கோபம் ஜ்வலிக்கும் பார்வையுடன் "இந்தச் சண்டாளியை நண்டுதெறக்காய் குழியில்போட்டு ஒரு முகூர்த்தம் புரட்டிப் பின் எண்ணெய்க் கொப்பரையில் போட்டுப் புரட்டி எடுங்கள்.' என்று உக்ரகத்தோடு கூறினான்.

இந்த காட்சியைக்கண்ட பேபிக்கு இது வெறும் தெருக்கூத்தாகத் தோன்றாமல் நிஜம் எமலோகத்திற்கே தான் வந்திருப்பதாயும் அடுத்தபடியாக தன்னையும் இப்படிதான் இழுத்துக்கொண்டுபோய் சிக்ஷிக்கப்போவதாயும் ஒரு தோற்றம் உண்டாகியதால் தன்னையறியாது கூவென்று கத்திவிட்டாள்.

கூத்து பார்க்க யாரோ ஒரு பெரிய மனிதர் காரில் வந்திருப்பதாக ஊர் ஜனங்கள் நினைத்தார்கள். பேபியின் மனத்தில் அவள் பிறந்து இது காலம்வரையில் தோன்றாத ஒரு புத்துணர்ச்சியும் புதிய எண்ணங்களும் இன்னதென்று விவரிக்கமுடியாதவிதம் புகுந்துகொண்டு வாட்டுகின்றன. "ஐயோ! இந்த கதி தானே நமக்கும் நேரும்... என்ன பயங்கரத் தோற்றம். எத்தனை குடல் நடுங்கும் தண்டனை!'' என்று எண்ணி ப்ரமித்துப்போய் இந்த அதிர்ச்சி தாங்காது அப்படியே சாய்ந்துவிட்டாள்.

இதற்குள் வெளியே சென்ற ட்ரைவர் சற்று வழி செய்துகொண்டு வந்து காரை ஓட்டினான். கார் மெல்ல போகும்போது நாடகத்தில் அடுத்ததாக ஒரு பெண்பிள்ளையைக்கொண்டு நிறுத்தி "ப்ரபோ! இவள் உண்மையில் மகா பக்த சிகாமணி. கணவனை தெய்வமாகத் தொழுதவள்தான்; ஆனால் ஒரே ஒரு நாள் இவள் தன் கணவனுக்கு மிதவும் பிடித்தமாக பலகாரத்தை அவன் செய்யச்சொன்னதும், அந்த பலகாரம் தனக்குப்பிடிக்காதென்று தனக்குபிடித்தமான பலகாரத்தைச்செய்து கணவன் சொல்லை அவமதித்துவிட்டாள். அன்று அவன் பட்டினி கிடந்தான். அந்த பாபந்தான் இவளுக்கு'' என்றான்

உடனே எமதர்மன் "ஓகோ! தனக்கென்று சுயநலம் பாராட்டிக் கண வனை அலக்ஷியம் செய்துப் பட்டினி போட்டுவிட்டுத் தான் அந்தப் பலகாரத்தை ஆனந்தமாகப் புசித்த பாபத்திற்காக அதோ, அந்த மூலையிலுள்ள கழுதையின் அமேத்யக்குவியலை ஆனந்தமாகத் தின்று இன்புறச் சொல்லு" என்றான்.

அதற்கந்தப்பெண் வெகு வணக்கத்துடன் "ஐயையோ! ஒரு நாள் செய்த அந்த பாபத்திற்கே இத்தகைய தண்டனையாயின் கட்டிய கணவனை ஆயுள் பூராவும் அவமதிக்கும் பாதகிகளுக்கு என்ன தண்டனைதான் கிடைக் குமோ?" என்று வாய்விட்டுக் கூறிக் கதறுகிறாள்.

இந்த காக்ஷி பேபியை அடியோடு கலக்கிவிட்டது. இந்த நாடகத்தை இன் னும் சற்றுநேரம் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் ஒருபுறம் தோன்றியபோதிலும் அதில் கண்ட காக்ஷிகளின் பயங்கரம் அவளது இதயத்தைச் சுற்றிக்கொண்டது.

இதற்குள் காரும் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தது. "**புராண வைராக்யம்; ஸ்மசான வைராக்யம்; ப்ரஸவதி வைராக்யம்**" என்பதுபோல் மார்க்கண்டேய புராண வைராக்யம் பேபியின் இதயத்தில் ஆழமாகப் பதிந்ததோடு தான் மனங் களித்துச்செய்துள்ள கொடுமைகளுக்கு என்னென்ன கொடிய பயங்கர தண் டனைகள் காத்திருக்கிறதோ...தான் எந்த கதிதான் அடைய நேருமோ! என்று நினைக்கும்போது பகீரென்கிறது. முகத்தில் பேய் அறைந்ததுபோன்ற ஒரு விகாரத் தோற்றம் உண்டாகிவிட்டது; தான்செய்த பாபங்களுக்கு இனி விமோ சனம் உண்டாகுமா! இதற்கோர் வழியும் துறையும் கிடைக்குமா! என்று ஏங்கித் தவித்தப்படியே தான் கடந்த நாட்களை இத்தகைய பாழும் மோகத்தில் கடத்திவிட்டதற்காக எண்ணிக் கண்ணீர்விட்டவாறு வந்தாள்.

காரும் தற்சமயம் இவர்கள் இறங்கியிருக்கும் ஓட்டலின் சமீபத்தில்வந்தது. பேபிக்கு உள்ளம் குழம்பித்தவிக்கும் வேகத்தில் ஒன்றுமே தோன்றவில்லை. 'ட்ரைவர்! காரை இங்கேயே நிறுத்திவிடு. நான் நடந்து போய்விடுகிறேன். நீ அம் மாவிடம் நான் சௌக்யமாகப் போய்சேர்ந்ததாக சொல்லு. இந்த வண்டியை அதோ இருக்கும் ஷெட்டுக்குள் விட்டுவிட்டுப்போ!! என்று கூறிவிட்டு பலவித மான மனத்துடிப்புடன் தேகம் ஒடுங்க வெயர்வை சொட்ட கால்கள் துவள சென்றாள். உண்மையில் ஆகாயமும் பூமியும் பேபிக்கு ஒன்றாகவே தோன்றியது.

44

"எத்தகைய காரிருளுக்கும் ஒரு கடுகளவு வெளிச்சம் புறப்படுவது இயற்கை யல்லவா! இருட்டு இருட்டாகவே இருக்க முடியாதன்றோ! அப்படி அந்த காரமே இருந்துவிடுமாயின் இயற்கையின் நியதி பாழடைந்தல்லவோ போய் விடும்? அப்படியேதான் சேர்ந்தார்போல் நான்கு நாட்கள் வானம் கருத்திருப்பி னும் ஐந்தாவது நாள் ஆதித்தன் தனது ஆட்சியை ஆரம்பிப்பதுபோல் எனது இருண்ட அந்தகாரமான வாழ்க்கையில் ஏதோ ஒரு சிறிய விளக்கின் வெளிச் சம் வந்திருப்பதுபோல் இந்த ரேடியோ நிலயத்து ஊழியம் கிடைத்திருப்ப தாகத்தான் நான் நினைக்கிறேன். என்னை இக் கதிக்கு உள்ளாக்கிய மகமாயித் தாயின் அருள்தான் இது கிடைத்தது" என்ற ஒரு சந்தோஷம் கிருபாவதியின் இதயத்தில் சதா ஒலித்துக்கொண்டிருந்தது. ஒருவேளை தான் அடிக்கடி ரேடி யோவில் பாடும்போது தன் கணவன் அதையாவது கேட்டு ஆனந்திப்பானோ? அல்லது அதையுந்தான் வெறுப்பானோ? என்றும் தோன்றியது.

அடுத்த க்ஷணமே குழந்தையின் நினைவு குபீரென்று வெள்ளம்போல் பாய்ந்து இதயத்தில் அமிருத மயமாகத் தேங்கும். நம் தாயாரின் குரல்தான் இது என்று குழந்தைக்கு எப்படித் தெரியும்? அதற்கும் பாக்கியமற்றுவிட்டதே, என்று நினைக்கும்போது துக்கம் பொங்கிவரும். நாம்போய் குழந்தையை ஏன் அழைத்துவரக்கூடாது? என்று ஒரு ஆவேசம் தோன்றும், அடுத்த வினாடியே உம்... இந்த வேலையின் நிலைமைக்குக் குழந்தையைக் கூட வைத்திருந்தால் சற்று ச்ரமமாகவிருக்கும். அதோடு தான் நினைத்துள்ள சங்கல்பத்திற்கு இடையூறாக ஆனாலும் ஆகும் என்ற யோசனையினால் முதலில் போகாதிருந்தாள்.

ரேடியோ நிலயத்தின் வேலை இவள் மனத்திற்கு மிகவும் பிடித்திருந்தது. முக்யமாக இவள் நிலயத்திற்கு வந்த பிறகு ப்ரதி வெள்ளிக்கிழமைகளிலும், ஏகாதசி முதலிய புண்ய தினங்களிலும் பஜனை செய்யும் முறையை ஸ்தாபித்து அதற்காக ஏராளமான பஜனை நாமாவளிகளைச் சேர்க்கவாரம்பித்தாள். பகவானின் நாமங்களையமைத்து அழகான மெட்டுக்களில் பல நாமாவளிகளைத்தானே இசைத்துத் தன் மனத்திற்கே ஆனந்தமாகப் பாடி ஆத்மார்ப்பணம் செய்வதை பேரானந்த பாக்யமாக எண்ணினாள்.

குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளையும் தானே தயார்செய்ய வாரம்பித்தாள். சில தினங்களில் வர சவுகரியப்படாத வித்வான்களோ, வித்வாம்ஸினிகளோ பாடவேண்டியதற்கு கிருபாவதியையே பாட ஏற்பாடு செய்திருந்தபோதுதான் முதல் முதல் முரளியும் கேட்டு இன்புற்றது. கிருபாவதி என்கிற பெயர் அடியோடு மறைந்துபோய் கிருபாவதியின் ஆதி தேவதையான **ஸ்ரீமதி லக்ஷ்மி** என்கிற பெயரே விளங்கிவிட்டது, 'லக்ஷ்மிக்கு அடிக்கடி பாடுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள். அந்தம்மாளின் மதுரகீதத்தை நாங்கள் மிகவும் ரஸிக்கிறோம்' என்று கடிதங்கள் நிலயத்திற்குப் பறக்கவாரம்பித்தன.

தினந்தோறும் காலையும் மாலையும் பாடுவதும் நிகழ்ச்சிகள் நடத்துவதும் ஒரு நூதன ஆனந்தத்தைக் கொடுத்ததோடு துக்கத்தையும் சிறிது மறப்பதற்குச் சாதனமாயிற்று. இவளுடைய அபூர்வமான கானத்தைக் கேட்டுப் பேரானந்தமடைந்த சில சீமாட்டிகளும் சீமான்களும் இவளுடைய சங்கீதக் கச்சேரியைத் தம் தம் வீட்டுக் கல்யாணங்களுக்கு வைக்கவேண்டுமென்கிற பேராவல் கொண்டு நிலயத்தாரிடம் கடிதம் எழுதி விசாரித்தார்கள்.

க்ருபாவதியை முதலில் அழைத்துவந்த தனிகரின் ஆதரவு இவளுக்கு அதிகமாயிருந்ததால் அவருடைய பங்களாவிலேயே இவளுக்கு ஒரு தனி விடுதி கொடுத்திருந்ததால் எவ்விதமான பயமும் இன்றி வெகு மேன்மையாகவிருந்தாள். அந்த தனிகர் இவளைக் கச்சேரிசெய்யும்படியாக எழுதிய கடிதங்களை எல்லாம் கொண்டுவந்து காட்டி "அம்மா! உன்னை நான் என் பெற்ற பெண்ணாக பாவித்துச் சொல்லுகிறேன். இந்த சரீரம் எப்படி சாச்வதமில்லையோ, அதே போல் இந்த சாரீரமும் சரீரம் இருக்கும்போதே சாச்வதமற்றுப்போனாலும் போகும். உனக்கோ திக்கு திவாணமில்லை. கணவனோ கொடும் பாவி. சண்டைக்குப் போனவன் செய்தியே தெரியாது கிடக்கிறான். நீ நாளை தரையில் படுத்தால் கையில் நாலுகாசு இருந்தால்தான் யாராவது பரிந்து கட்டிக்கொண்டு செய்வார்கள். அதில்லாவிட்டால் பெற்ற பெண்பிள்ளையாயினும் சரி உடன்பிறந்தவர்களாயினும் சரி தூர விலகித்தான் நிற்பார்கள். ஆகையால் உன்னுடைய மதுரகீதத்தை வீணாக்காது நீயும் பயனடைந்து சங்கித ப்ரியர்களையும் ரஸிக்கச் செய்து ஆத்மார்த்தகமான இன்பத்தை அடைவதில் யாதொரு குற்றமும் இல்லை.

உன்னுடைய அபூர்வ தேவகானத்திற்கு முதல் முதல் எடுக்கும்போதே 150 ரூபாய் தருவதாக என் சினேகிதரே ஒருவர் கூறி வேண்டுகிறார். 200 ஆக வேண்டுமாயினும் நான் சிபார்சு செய்யத் தயாராக இருக்கிறேன். என்ன சொல்கிறாயம்மா! மாதம் 10 கச்சேரியும் வரலாம்; 15 கச்சேரியும் வரலாம் பத்துக் கச்சேரி செய்தால்கூட ஆயிரம் ரூபாய் வெகு எளிதாக வந்துவிடும். பணம் கையிலிருந்தால் நீ கட்டாயம் மேன்மையாகவே வாழலாம். இந்த ஊர் ரேடியோவில் எவ்விதமான நிபந்தனையுமில்லையாகையால் நான் துணிந்து உனக்கு சிபார்சு செய்கிறேன். என்ன சொல்கிறாய்?" என்றார்.

க்ருபாவதியின் மனம் விரக்தியாலும் பக்தியாலும் பண்பட்டு ஒருவிதமான நிலைமையை அடைந்து மாறுதலாகிவிட்டதால் எப்படியாவது தன்னுடைய சங்கீதத்தைக்கொண்டு ஒரு தனிப் பதவி சம்பாதித்து அதன் மூலம் ஏராளமான தருமம் செய்யவேண்டும் என்கிற தடுக்கமுடியாத வேட்கை உண்டாகியது. நன்றாக யோசனை செய்த பின்னர் சரி என்று ஒப்புக்கொண்டாள். முதல் முதல் கச்சேரி செய்ய உட்கார்ந்தபோதுமட்டும் சற்று அச்சமாயிருந்ததோடு,

தன்னை தன் கணவனோ, நாகராஜனோ யாரேனும் பார்த்துவிடப்போகிறார்களே என்று திடுக்கு திடுக்கென்று இதயம் அடித்துக்கொண்டது.

ஆனால் அடுத்த விநாடியே "ஏன் இந்த பயம்? வேண்டாமென்று கைவிட்டு நடுச்சந்தியில் நிறுத்தியபிறகு என்னைப்பற்றி யாருக்கென்ன கவலை? யார் என்னை என்ன செய்யமுடியும்? என் கையில் நாலு காசைச் சேர்த்துக்கொண்டு என் கண்மணி ப்ரேமாவையும் அழைத்துவந்து அவளை ராஜபோகமாக வளர்க்க மாட்டேனா!" என்கிற ஒரு உத்வேகம் மனத்தில் பதிந்ததால் மனது துணிந்தது.

முதல் கச்சேரிக்கே 200 ரூபாய் கை நிரம்பக் கிடைத்ததைக் காண க்ருபாவதியின் உள்ளம் பூரித்தது. அந்த பணத்தை அப்படியே ஒரு செப்புக்காசுகூட எடுக்காமல் அம்மன் கோயிலுக்கு அர்ப்பணம் செய்து ஒரு வெள்ளிக்கிழமை உத்ஸவம் செய்வதற்கு நிரந்தரமான ஏற்பாடு செய்து, "அம்மனின் அருளில்லாவிடில் இத்தகைய மாறுதல்கள் என் வாழ்நாளில் ஒருபோதும் ஏற்படப்போவதில்லை; 'மதுரகீதம், மதுரகீதம்' என்று உலகமே கொண்டாடும் ஒரு சிறப்பும் ஏற்படப்போவதில்லை. எல்லாம் அம்மனின் சோதனை" என்று தேறினாள்.

ரேடியோ கனவான் தெரிவித்தபடி அம்மாதம், கல்யாணக் கச்சேரிகள் செய்ததில் மட்டும் ரொக்கமாக ஆயிரத்து இருநூறு ரூபாயும், சில சேலைகளும், வெள்ளி, தங்கப் பதக்கங்களும் கிடைத்ததுகண்டு உண்மையில் கிருபாவதி துக்கம் என்பதையே மறந்தாள்: சேலைகளை அப்படியே அம்மனுக்கு அளித்துவிட்டாள். பதக்கங்களைமட்டும் தன் கண்மணி ப்ரேமாவுக்குப் பூட்டி அழகு பார்க்க ஆசை அடித்துக்கொண்டது.

பணத்தைப் பார்க்கும்போது முதலில் இதைக்கொண்டு என்ன செய்யலாம் என்கிற யோசனையும் உண்டாகியது. சம்பளத்தில் மிச்சமானதையும் இதையும் சேர்த்து ஒரு அழியாத ஸ்தாபனமாக செய்யவேண்டும் என்று மனது பறந்தது, கச்சேரிகளுக்கு ஓய்வு ஒழிவின்றி தனிகர்கள் வசிக்கும் நாட்டில் வரவாரம்பித்ததால் ரேடியோ நிலயத்தின் மேலதிகாரிகள் உத்தரவுகொடுக்க மறுத்தார்கள்.

தான் கச்சேரிசெய்தே இன்பமாக வாழ்க்கை நடத்தலாம். இந்த நிர்ப்பந்தம் வேண்டாம் என்றும் முதலில் தோன்றியது. ஆனால் அடுத்த விநாடியே அந்த தனிகர் இத்தகைய பேருபகாரம் செய்யாதிருந்தால் நாம் எந்த கதியாகி இருப்போம்; அவர் கொண்டு வைத்ததற்காக இதை விடக்கூடாதென்று தோன்றியதால் அடிக்கடி வெளியூர்களுக்குப் போகாமல் நிறுத்திக்கொண்டாள்.

க்ருபாவதி ரேடியோ நிலயத்திற்கு வந்து இன்னும் ஆறுமாதங்கூட ஆகவில்லை. லக்ஷ்மிபாய் என்கிற புனைப்பெயரில் அவளுடைய மதுரகீதம் உலக பிரஸித்தமாகிவிட்டது-இத்தகைய அபூர்வ சங்கீத "மழை பொழியும் மாதரசி, எப்படியிருப்பாளோ!" என்று சில விஷமிகளின் கண்கள் துளாவாமலில்லை.

இந்த விஷயத்தில் மகமாயியின் கடாக்ஷ வீக்ஷண்யத்தின் பலன் அவளை நெருங்கவிடாது விஷமிகளை வெருட்டியடித்ததும் அவளுடைய பாக்யமென்று நினைத்தாள். ஒரு பெரிய லக்ஷாதிபதியின் வீட்டுக் கல்யாணத்திற்கு இவள் கச்சேரி ஏற்பாடாகியிருந்தது. கல்யாணப் பெண்ணின் மாமன் மகா மோசமான மனிதன். கச்சேரிக்கு வரும் மனுஷியும் தனக்குச் சரியான நிலைமையில்தான் இருப்பாள் என்பது அவனுடைய அனுபவம்.

க்ருபாவதியை அழைத்துவர வண்டி சென்றது. க்ருபாவதி வருவதற்குள் ஒரு தனி அறையில் தடபுடலாக அலங்காரம் செய்து ஸ்பெஷலாக ஜிகினா மாலை முதலியன வாங்கி வைத்தான். இவளுடைய மதுரகீதத்தைப் பலமுறை ரேடியோவில் கேட்டிருந்ததால் அந்த கீதத்திற்கு மேலான அழகுடன்தான் அவள் விளங்குவாள்; என்று தீர்மானித்துக்கொண்டான். பழ வகைகளும் பலகார தினுசுகளும் புஷ்பச் செண்டுகளுமாக வைத்துக்கொண்டு காத்திருந்தான்.

கார் ஹாரன் கேட்டவுடனே தன்னைத்தான் சரியாக அலங்கரித்துக்கொண்டு வெகு பரபரப்புடன் உட்கார்ந்திருக்கையில் ட்ரைவர் கிருபாவதியை அழைத்துக்கொண்டு இவன் முன்னேற்பாட்டின்படி இந்த அறைக்கு வந்தான். கிருபாவதிக்

குப் பக்க வாத்யம் வாசிப்பவர்களும் மூன்று பெண்களே யாதலால் அவரவர்களின் வாத்யங்களைப் பின்னால் வேலைக்காரன் கொண்டுவந்தான்.

மற்ற பெண்கள் சாதாரண அலங்காரத்துடனிருந்தார்கள். கிருபாவதிக்கோ நெற்றியில் பெரிய குங்குமப்பொட்டும் சாதாரணமான ஒரு சேலையும் கையில் கண்ணாடி வளையல்களும் கழுத்தில் பச்சைபசேலென்று மங்கள சூஸ்திரமும் தவிர வேறு எந்தவிதமான அலங்காரமும் இல்லை. அவளுடைய தலையழகுதான் தெரிந்தே இருக்கிறது. மொட்டையடித்த தலைமாதிரி இருந்தது.

இந்த ஸ்வரூபத்தைப் பார்த்தவுடனே அந்த துஷ்டன் ஒரே துள்ளாகத் துள்ளிக் குதித்து ஓடினன். கிருபாவதி கடகடவென்று சிரிக்கும் குரல் அந்த மூர்க்கனின் மண்டையில் செம்மட்டியாலடிப்பது போலாயிற்று. இதுபோன்ற சம்பவங்கள் எத்தனையோ நடந்திருப்பது முற்றும் க்ருபாவதிக்கு ஒரு ஹாஸ்ய நாடகமாகத் தோன்றும். அவைகளையே ஒரு கருத்தாக வைத்து ரேடியோவுக்கு ஒரு நாடகமாகத் தயார்செய்து விடுவாள். ஆதலால் அவளுக்கு இது மிகவும் சர்வ சாதாரணமாகத் தோன்றியது.

க்ருபாவதி எதிர்பாராத விதம் அவள் கையில் தற்போது ரொக்கமாக 10000 ரூபாய் சேர்த்து வைத்திருப்பதைக் கண்டதும் இதை எவ்வகையில் செலவுசெய்வது என்கிற பெரிய யோசனை உண்டாகியது. தன்னைப்போல் மகமாயி விளையாடியவர்கள் அம்மன் ஸேவைக்காக சத்திரத்தில் தங்குவதற்கு மட்டும் வசதியிருப்பதுடன் ஒருவேளைச் சாப்பாட்டிற்கும் வசதி செய்யவேண்டும் என்று தோன்றியதால் இந்த அபிப்ராயத்தை அந்த ரேடியோ கனவானிடம் தெரிவித்தாள். அதையவர் ஆமோதித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்து சத்திரத்துப்பூசாரியிடம் ஒப்புவித்தார். அம்மைவார்த்து அங்க ஊனம் உண்டாகியவர்களுக்கு ஆகாரம் போடுவதற்கும் அவர்கள் ஸேவைசெய்ய உதவியளிப்பதற்கும் வெகு உபகாரமான முறையில் **லக்ஷ்மியம்மாள் கைங்கர்யம்** என்கிற பெயரில் ஸ்தாபித்தார்கள். கிருபாவதி அந்த தர்ம கைங்கர்யத்திற்குத் தன் வரும்படி பூராவும் கொடுத்துவந்தாள்.

மாதமொருமுறை அந்த அம்மன்கோயிலுக்குச் சென்று அம்மனை ஸேவித்துவிட்டு இந்த தர்ம கைங்கர்யம் சிறப்பாக நடக்கிறதா என்று கவனித்துவருவாள். அனாதைகளாயும், பரம ஏழைகளாயும் உள்ளவர்களுக்கு இட வசதியோடு சாப்பாட்டு வசதியும் கிடைத்ததால் அவர்கள் அடையும் பேரானந்தத்தைக்கண்டு க்ருபாவதி உள்ளம் பூரித்து இன்ப மயமாகத் தேங்கும், அந்த ஆனந்தத்தில் தன் குழந்தையைக்கூட மறந்துபோனாள்.

குழந்தையைக் கொண்டு வந்துவிட்டால் அதற்குச் செய்யவும் சொத்து சேர்க்கவும்தான் மனது நாடுமேயன்றி தர்ம கைங்கர்யத்தில் செல்லமுடியாது. ஏதோ ! அதன் தலைவிதிப்படிக்கு சிலகாலம் பிரிந்திருக்கட்டும். பாட்டியும் அப்பாவும் எனக்கு சத்துருக்களேயன்றி என் கண்மணிக்கு மித்திரர்கள்தான்; அவளை வெகு சீரும் சிறப்புமாகத்தான் வளர்ப்பார்கள்... சீச்சீ...ஏன் இந்த பாசம்! இந்த பாசத்தை அடியோடு களைந்துவிட்டால் நாம் இதேபோன்ற புனித காரியத்தைச் செய்துகொண்டு ஒருவர் கண்ணிலும் படாதிருக்கலாமல்லவா...என்ற ஒரு எண்ணமும் ஊடே வளர்ந்து வந்தது.

எனினும் தன் கணவனின் முகத்தையும் குழந்தையின் முகத்தையும் பார்க்க வேண்டுமென்று எண்ணிவிட்டாலோ, அந்த சமயம் அவளையறியாத சோகம் பாசிபோல் படர்ந்துவிடும். ஓடிப்போய் கண்ணால் பார்த்துவிட்டு வரலாமா என்று நினைத்துத் துடிப்பாள். அடுத்த நிமிஷமே "சே,. அஞ்ஞானப் பிசாசே ! என்னை வந்து ஆட்டாதே" என்று தேற்றிக்கொண்டு மனத்தைத் தானே முறித்துக்கொள்வாள். அம்மாதிரியான சமயங்களில் தன்னையறியாது பகவானைத்துதித்துப் பாடவாரம்பித்துவிடுவாள். அதுவே கவலையை மறக்கச்செய்து ஆனந்தத்தைக் கொடுக்கும். சிறுகச் சிறுக தேறுதலையடைந்து வைராக்யத்தை வருவித்துக்

கொள்வாள். இவளுடைய அந்தரங்கத்தின் துடிப்பை யாரறிவார்கள்? எல்லாம், நீறுபூத்த நெருப்புப்போல் பூடகமாகவே இருந்தது.

45

அதிகாலை நேரம். பக்ஷிகளெல்லாம் தம்தம் கூட்டைவிட்டு ச்வதந்தரத்துடன் ஆனந்தமாகப் பறந்து செல்லும் அத்புதக் காக்ஷியை பேபி ஜன்னல் வழியால் ப்ரேமாவுக்குக் காட்டி விளையாடச் செய்தவாறு "கிளியே! கிளியே! வா வா! கிண்ணியில் பாலைத்தருவேன்...குயிலே! குயிலே வாவா... கூடையில் பழங்கள் தருவேன்." என்று ராகமாகப் பாட்டைச் சொல்லிக்கொடுக்கிறாள். குழந்தையும் வெகு ஆவலுடன் அதை திருப்பித் தனது அத்புதமான மழலைமொழியால்; சொல்வதைக் கேட்ட பேபியின் உள்ளமே அவளையறியாது மகிழ்ந்ததென்றால் இந்த அபூர்வ காக்ஷியைக் கண்டு அதிசயிக்கும் தாதியின் உள்ளம் எப்படித்தான் இருக்கும்? தாதிக்கு ஒன்றுமே புரியவில்லை. இரவு இத்தனை அட்டகாஸமும் அலக்ஷியமும்செய்த மகாராஜி இப்போது குழந்தையை வெகு பக்ஷத்துடன் தாலாட்டிச் சீராட்டி விளையாட்டுக் காட்டுவதை எப்படி நம்பமுடியும்? "இதெல்லாம் வெறும் நாடகமோ! குழந்தையை ஒருவேளை கொன்றுவிடுவாளோ!" என்றுகூட அவளது மனது துடுக்காக எண்ணியது. அதை வெளியிட்டுக் கொள்ளமுடியவில்லை.

'அம்மா! குழந்தையை இப்படித் தாருங்கள்' என்று ஜாடையாகக் கேட்டுப் பார்த்தாள். தாதியே அதிசயிக்கும்படி பேபி அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "தாதீ!...என்னிடமே இருக்கட்டும். நான் ஒன்றும் செய்துவிடமாட்டேன். எனக்கு நேற்றுவரையில் புத்திகெட்டுப் பயித்தியம்பிடித்து மோகப் பிசாசு ஆட்டியது. இன்று அது என்னைவிட்டு விலகிப்போய்விட்டது. நீ என்மீது ஏதோ சந்தேகப்படுவதாக உன் பார்வையே காட்டுகிறது. இதோ! இக்குழந்தையின்மீது ஆணையாக நான் ஒன்றும் செய்யமாட்டேன். என்னை நம்பி என்னிடமே இந்த அத்புத ஆனந்தப் பொக்கிஷத்தைக் கொடுத்துவை... தாதீ! என்னை மோசக்காரி என்றும் நாசக்காரி என்றும் நினைக்காதே" என்று கெஞ்சலாகக் கேட்பதையும் பேபியின் கண்களில் நீர் தேங்குவதையும் கண்டு தாதி வியக்காமலும் ப்ரமித்து நிற்காமலும் இருக்கமுடியுமா!

நேற்று வந்தவுடனே பார்த்த பேபிக்கும் இப்போது பார்க்கும் பேபிக்கும் அஜகஜேந்திரமான வித்யாஸமிருப்பதை தாதி ஒரு நொடிப்பொழுதிலறிந்து கொண்டு அந்த வியப்புடன் பேபியை வெகு ஆச்சரியமாகக் கவனித்தாள். கோணவகுடும், முறத்தகலம் தோள்மீது புரண்டு ஸினிமா நக்ஷத்திரங்கள் அணிவதுபோன்றலோலாக்கும், உடம்பு முற்றும் தெரியும் புடவையும், கரள்கரளாக வாரி பன்வைத்துப் போட்டிருந்த பிச்சோடாவும், நெத்தியில் ஒன்றுமே இல்லாதது போல் சந்தேகிக்கும்படி இரண்டு புருவங்களுக்கும் மத்தியில் கொசுமேப்பது போன்ற ஒரு சாந்துபொட்டும், ஸ்த்ரீகளுக்கு முக்யமான ஆபரணமாகிய மூக்குத்தியில்லாததும், கழுத்தில் ஒரே ஒரு மெல்லிய செயினும், கையில் சில பேஷன் வளைகளும், ப்ரூச்சும் இப்போது எப்படித்தான் மறைந்ததோ தெரியவில்லை.

நல்ல அழுத்தமான பட்டுப் புடவையும், தலைப்பை அடக்கமாகச் சொருகிக் கொண்டிருப்பதும் பார்ப்பதற்கு மங்களகரமாயும் கம்பீரமாயும் பெரிய குங்குமப் பொட்டும், தளதளவென்று மின்னும் வைரக் கம்மல்மட்டும் காதில் ஜ்வலிக்கவும், நேர்வகிடு எடுத்துப் பின்னிய பின்னல் பாம்புபோல் நெளிந்து முதுகில் தொங்கவும், கழுத்தில் மங்களகரமான மஞ்சள் சரடும்; சங்கிலியும் கைகளில் வளையல்களும் ப்ரகாசிப்பதைக்கண்டு தாதிக்குக் கூறத்திறமற்ற ஆச்சரியம்கரை கடந்தது. குழந்தைக்கு அவள் த்ரோகம் செய்யமாட்டாளா!...என்கிற கேள்வி தாதியின் மனத்தில் இப்போதும் எழாமலில்லை. "சீச்சீ! நாகரீகத்தில் மூழ்கிய தோஷம் அப்படி நடந்தாளேயன்றி கொலை செய்யமாட்டாள். அனியாயமாய் அவ்வாறு நினைக்காதே" என்று ஒரு குரல் உள்ளே சொல்கிறது. எஜமான் எங்கேயோ வெளியில் சென்றவன் இன்னும் வரவில்லையே என்று எதிர் பார்த்திருந்தாள்....

ப்ரேமாவுக்குத் தானே தலையைப் பின்னி ஆகாரம் ஊட்டி வெகு அன்போடு தூங்கவைத்தாள். அதன் முகவசீகரமும் குருகுருப்பான பார்வையும் உண்மையிலேயே பேபியின் உள்ளத்தை எட்டித் துளாவியது. "ஐயோ! இத்தகைய அழகு பிம்பத்தை பெற்றெடுத்தவள் அதனை வைத்துச் சீராட்டி அனுபவிக்காமல் போய்விட்டாளே! பாவம். பயித்தியமென்று நடித்துக் கணவனுக்குச் சந்தோஷத்தைத் தேடிய உத்தமி எங்கு மறைந்திருப்பாள்? இந்த ரகஸியம் அவருக்குத் தெரியாதல்லவா! ரேடியோவில் பாடியது உண்மையில் அவளாக இருக்குமா! முன்னர் நான் அவளுடைய மதுரகீதத்தைக் கேட்டதே கிடையாதே...ஒருகால் இவர் அவளைத்தான் தேடிக்கொண்டு போய்விட்டாரோ! வீட்டில் காணவில்லையே! என்ன முட்டாள்தனம் செய்துவிட்டோம்! தலைக்குமேல் ஆபத்து ஓடியபிறகு ஞான உதயமாகியதானது கிழவி பிள்ளை பெற்றதுபோலல்லவா இருக்கிறது. அந்த உத்தமிக்கு உண்மையில் பயித்தியமில்லாதிருக்கும்போது எப்படி பயித்தியமாக நடித்தாள்?" என்கிற கேள்வியே பேபியின் மனத்தில் வெகு ஆழமாகப் போராடுகிறது.

நிலைக்கண்ணாடியில் தன்னுருவத்தைப் பார்க்கும்போது, "என்ன? பேபியா! நானா பேபி!"...என்று அவளே ப்ரமித்தாள். இத்தனை நாள் இந்த ஓட்டல் வாஸம் மிகவும் மனோகரமாயும் பெருமையாயுங்கூடத் தோன்றிய அதே உள்ளத்திற்குத் தனது மனமும் அலங்காரமும் மாறிய வேகத்தில் இங்கிருப்பது பொருந்தாது ஏதோ ஒருமாதிரியாகத் தோன்றியது. உடனே இதைவிட்டுக் கிளம்பி தன் மாமியார் வீட்டிற்கே போய்விடவேண்டுமென்கிற நூதன எண்ணம் உதித்ததால் தனதும் தன் கணவனுடையதுமான சாமான்களை அடுக்கி பெட்டிகளிலும் ஹோல்டால்களிலும் வைத்துக் கட்டவாரம்பித்தாள்.

மனமுடைந்து நடைப்பிணம்போல் சோர்ந்துபோன முரளீதரன் அப்போது தான் வெளியிலிருந்துவந்தான். பேபி அலங்காரமே மாறிவிட்டதால் அவனுக்கு முதலில் அடையாளமே தெரியாமல் வேறு அறையில் புகுந்துவிட்டதாக எண்ணி ஒருக்ஷணம் தியங்கினான். ஆனால் தொட்டிலின் பக்கத்திலேயே தாதி வியப்பே வடிவாய் பேபியை கவனித்துக்கொண்டு நிற்பதைப் பார்த்ததும் இது தன் விடுதி தான் என்ற நிச்சயம் உண்டாகியது. அப்போதும் வேறு யாரோ வந்திருப்பதாகவே பேபியைப் பார்த்ததும் நினைத்துக்கொண்டு சற்று மயங்கும் சமயம், இவன் வந்திருப்பதை யறிந்த பேபி ஓட்டமாக ஓடிவந்து முரளியின் இருகால்களையும் பிடித்துக்கொண்டு, "ஸ்வாமீ! ஸ்வாமீ! என்னை மன்னித்து என் குற்றங்களை எல்லாம் க்ஷமித்து என்னை ஆதரிக்கவேண்டும். நான் எனது மூடத்தனத்தினால் தெரிந்தே, வேண்டுமென்றே மகத்தான குற்றங்களைச் செய்துவிட்டேன். எனது பாவத்திற்கு மன்னிப்பே இல்லை என்பதும் எனக்குத் தெரியும். உங்கள் கருணையால் என்னை க்ஷமிக்க மன்றாடிவேண்டுகிறேன். - என் புத்தி திருந்திவிட்டது. என் அகம்பாவம் அழிந்துவிட்டது" என்று முரளி ப்ரமிக்கும்படிக் கலங்குவதைக் கண்டதும் அவன் அப்படியே தம்பித்து நின்றான்.

அவனுக்கு நம்பிக்கையே கொள்ளவில்லை. "பேபியா இம்மாதிரி பேசிக் கண்ணீர்விடுவது? இதென்ன மாயாஜாலம்! இதென்ன தந்திரச் சூழ்ச்சி" என்றே நினைத்தான். சில விநாடிகள் சென்றதும்..."யாரது!...பேபியா...பேபியின் வாயிலிருந்தா இத்தகைய வார்த்தைகள் வருகின்றன...ஒருவேளை வேறு யாரிடமாவது பேசவேண்டியது ஆள் மாறாட்டமாகிவிட்டதா...நான் முரளி...என் காலைவிடு பேபி! நான் வேறு எவனுமில்லை" என்று சுருக்கெனப் பொத்தும்படிக் கூறினான்.

இதுகேட்ட பேபி மீண்டும் கண்ணீர் பெருகக் கதறியவாறு, "ஐயோ என்னை இனி பேபி என்று அழைக்கவேண்டாம். பேபி மகாபாவி. அவள் செத்தாள். அவள் அகந்தை அழிந்தது. அவளுடைய புனர்ஜன்மமாகிய ஸாவித்ரி தான் இங்கு அவள் கணவனிடம் மன்னிப்புக் கோருகிறாள். இனி பேபி என்று கூப்பிடாதீர்கள். எனக்கு இட்டுள்ள ஸாவித்ரி என்கிற பெயரே இனி வழங்கட்டும். அப்பெயர் கர்ணாடகமாயிருக்கிறது, நன்றாக இல்லை என்று பேபி

என்றும் பாபி என்றும் அழைத்துப் பாழாக்கிவிட்டார்கள் என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்கள்'' என்று கெஞ்சினாள்.

முரளிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. விழிக்கிறான். பேபியின் புலம்பலும் அவனுக்கு மனத்தை இளக்கியது. அவளைத் தூக்கி நிறுத்தினான். அவளுடைய டாம்பீகமும் நாகரீக அலங்காரமும் அடியோடு மறைந்துபோய் வெகு சாதாரணமான குடும்பத்துப் பெண்களைவிட எளிய முறையில் காக்ஷி கொடுப்பதைக் கண்டு உண்மையில் ஆச்சரியம் உச்சத்தை எட்டியது. அவளை உற்று உற்றுப்பார்க்கிறான். தாதியின் முகத்தையும் குழந்தையின் முகத்தையும் பார்க்கிறான். ஒன்றும் புரியாத நிலைமையில் ''பேபி!... இதென்ன நாடகமா... சினிமாவா ...நேற்று இரவு முறைத்த முறைப்பென்ன... இன்று இத்தனை பாகவத லக்ஷணத்தில் துலங்கும் ப்ரகாசமென்ன!... இந்த செப்பிடுவித்தையை நம்பமுடியவில்லையே! இந்த நாட்டியம் நன்மைக்கா! தீமைக்கா! என்னை அடியோடு குட்டிச்சுவரடித்து விடுவதற்கா! எதற்காக இந்த மாறுட்டம்?'' என்றான்.

பேபியினல் இந்த வார்த்தையைத் தாங்கமுடியாது துக்கம் பொங்கியது. ''ஸ்வாமீ! எனது மதிமயக்கம் தெளிந்து நான் இப்போதுதான் உலகத்துப் பெண்களைப்போல் இருக்கவேண்டுமென்கிற ஞானத்தை அடைந்திருக்கிறேன். உங்கள் பாத சாக்ஷியாகவும், உங்கள் குலதெய்வத்தின்மீது ஆணையாகவும் நான் இனி இந்த நிலைமையைவிட்டு மாறமாட்டேன். நாம் ஆடிய பம்பர ஆட்டம் போதும். என்னை நம்புங்கள். சத்தியமாக நம்புங்கள், நாம் இந்த ஓட்டலில் இருக்கவேண்டாம்; நமது வீட்டிற்கே, உங்கள் பெற்றோரிடமே சென்றுவிடுவோம். அதற்காகத்தான் மூட்டைகளும் கட்டிவிட்டேன். சாப்பாடு முடிந்தவுடனே புறப்பட்டு விடுவோம். லீவை நீங்கள் ரத்துசெய்தபடியே இருக்கட்டும். நீங்கள் ப்ரியப்பட்ட ஊருக்கே போய்விடலாம்'' என்றாள்.

இதன் மர்மம் ஒன்றுமே தெரியாத நிலைமையில் முரளி தத்தளித்தான். ஊருக்குப்போவது அவனுக்கு முதலே பிடிக்கவில்லை. தன் முதல் மனைவியைப் பற்றிய தகவலை இளையவளிடம் சொல்வதற்கும் வெட்கமும் துக்கமும் பாதித்ததால் அதையும் மறைத்து மழுப்பிவிட்டான். ''இந்த பக்கங்களில் இத்தனை நாட்கள் இருந்தாகிவிட்டது. இனி வடநாட்டுக்குப்போய் அந்த ப்ரதேசங்களைப் பார்க்க ஆசையாயிருப்பதால்தான் என்னை அங்கு மாற்றும்படிக் கேட்டுக்கொண்டேன். ஆகையால் அங்கேயே போக ஏற்பாடு செய்துவிடுகிறேன். உன்னுடைய இந்த செப்படிவித்தையைப் போன்ற மாறுதலைத்தான் என்னால் நம்பவே முடியவில்லை. எனினும் உன் கண்ணீரையும் அலங்கார மாற்றலையுங் கண்டு நம்புகிறேன். இன்றிரவே பஞ்சாபுக்குப் புறப்படவேண்டும்'' என்றான்.

க்ருபாவதிக்குப் பயித்தியமில்லை என்கிற விஷயத்தையும் நாகராஜன் பார்க்கவந்தபோது பார்க்கமுடியாது என்றுதானே தடுத்து அனுப்பிவிட்ட விஷயத்தையும், ரிஜிஸ்டர் கவரைத் திருப்பியதையும், கூறலாமா! வேண்டாமா! என்கிற போராட்டம் பேபியின் உள்ளத்தில் பலத்த போராட்டத்தை நிகழ்த்துகிறது. 'சொல்லிவிட்டால் நாகராஜனை ஏமாற்றிய வஞ்சத்திற்குக்கோபம் வந்துவிடுமோ என்னமோ! க்ருபாவதிக்குப் பயித்தியம் இல்லை என்றதையறிந்தால் அவளைத் தேடிக்கொண்டு கிளம்பி நம்மைக் கைவிட்டுவிடுவானோ என்னவோ!' என்கிற மகத்தான பயம் வேறு நடுங்குவதால் எது எப்படியானுலும்சரி. இந்த மர்மங்களை மறைத்தேவிடுவது'' என்கிற முடிவுக்கு வந்தாள்.

இத்தகைய விசித்திரமான மாறுதல்களுக்கு ஆதி காரணமாகிய தன் தந்தையின் விதியின் பரிதாபம் ஒருபுறம் இதயத்தைப் பிளக்கிறது. இன்றே ஊருக்குப்போகவேண்டுமென்று தீர்மானம் செய்திருப்பதால் அதற்குள் ஆள் ஒருவரும் வராவிட்டால் என்ன செய்வது என்றும் தத்தளிக்கின்றாள். தன்னுடைய இந்த புதிய ஞானோதயத்தைக் கண்டு தன் கணவன் அடங்காத சந்தோஷப்படுவான் என்று எண்ணியதற்குமாறாக அவன் விநோதமாகவே பேசி நடந்துகொள்வதும் இவளுக்கோர் புதுமையாயும் ஏமாற்றமாயும் இருந்தது.

தன் வாழ்க்கையின் சக்கரம் சுற்றவாரம்பித்த தினுசே மாறிப்போய் எப்படி எப்படியோ இழுத்துக்கொண்டு போகிறதே. இந்த வேகம் எங்கு கொண்டு தள்ளிவிடுமோ? அன்றி எங்கு நிற்குமோ, தெரியவில்லையே என்கிற கலக்கம் அபாரமாகப் பொங்குகிறது. தனது சிநேகிதர்களெல்லாம் விருந்து நடத்த ஏற்பாடு செய்திருப்பதால் இந்த சமயம் அவர்கள் யாரேனும் வந்து பார்த்துவிடப்போகிருர்களே என்ற அச்சமும் தோன்றியது.

இருதலைக்கொள்ளி எரும்புபோல் தவிக்கும்போது முரளி இவளிடம் பல்லிளிக்கவோ, அதிகமாகப் பேசவோ இல்லை. தாதியிடம் சென்று "தாதீ! குழந்தையை எதற்கும் நீயே கவனித்துக்கொள்ளு. அவளுடைய மாறுதலில் எனக்கு நம்பிக்கையே கொள்ளவில்லை. இன்னும் சில நாட்கள் சென்றபிறகுதான் சொல்ல முடியும். குழந்தைக்கு ஏதாவது ஆபத்துவந்தால் நீதான் ஜவாப்தாரி. பத்திரம்" என்று சற்று ரகஸியமாகக் கூறுவதை பேபி எப்படியோ கேட்டுவிட்டாள். அந்த வார்த்தையாகிய தணல் பேபியை அப்படியே சுட்டு எரிப்பதுபோல் இருந்தது.

முரளி சொல்லியதற்கு தாதி சற்றும் தயங்காமல், "சாமீ! நானுகூட அப்பிடிதான் நினைத்தேன். இரவு தானே மோட்டாரை ஓட்டிக்கொண்டு எங்கேயோ போனதை நான் என் கண்ணுல் கண்டேன். காலையில் இத்தகைய மாறுதலுடன் இருப்பதைப் பார்த்தால் என் மனதுகூட நம்பவில்லை. எஜமான் உத்திரவு எப்படியோ என்றுதான் யோசித்தேன். நான் குழந்தையைப் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறிய வார்த்தைகளும் பேபியை அப்படியே துடிக்கச்செய்தன. "ஐயையோ! நான் உண்மையாய் மனமறிந்து மாறுதலடைந்ததற்கு இதுதான பலன். சந்தேகத்திலும் சங்கடத்திலுமா கொண்டுவிட்டது" என்கிற துக்கம் மலைபோல் மூண்டது.

46

க்ருபாவதியின் சுறுசுறுப்பையும் அத்புதமான மதுரகீதத்தையும், அவள் புதிது புதிதாக சிறந்த நிகழ்ச்சிகளைத் தயார் செய்யும் சாமர்த்தியத்தையுங் கண்ட அந்தரபுரி ரேடியோ நிலயத்தார் அவளைத் தங்கள் ஊர் நிலயத்திற்கு மாற்றல் செய்யவேண்டுமென்று மேலதிகாரியிடம் கேட்டுக்கொண்டதன்பேரில் கிருபாவதியை அந்தரபுரிக்கு மாற்றலாகும்படி உத்திரவு வந்துவிட்டது.

இதைக் கண்ட கிருபாவதியின் உள்ளம் வருத்தமே யடைந்தது. தனக்குத் தகப்பனர் போலவிருந்து இத்தகைய பேராதரவை யளிக்கும் பெரியவர்களின் குடும்பத்தை விட்டுவிட்டுத்தான் முன் பின்னறியாத ஊருக்குப் போனல் என்ன நேருமோ! எப்படியிருக்குமோ! என்கிற கவலையே பெரிதாயிற்று.

இவளை முதல் முதல் கொண்டுவைத்த கனவான் இவளது மாறுதலறிந்து, "அம்மா! சம்பள உயர்வும் தனிக் கவுரவமும் ஒன்றுகூடி வந்திருக்கும் இவ்வேலையை நீ உதாசீனம் செய்யாதே. எனக்கு வேண்டிய நண்பர்கள் அங்கிருக்கிருர்கள். அவர்களிடம் உன்னை வெகு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளும்படிக்கு ஏற்பாடு செய்கிறேன். இன்னும் இரண்டொருமாதத்தில் என்னையும் அதே ஊருக்கு மாற்றிவிடுவார்கள். நான் வந்துவிடுகிறேன். ஆகையால் இதை மறுக்காது ஒப்புக்கொள்ளம்மா! நான் இத்தனை தூரம் எதற்காகச் சொல்கிறேன் தெரியுமா! உன்னுடைய தரும குணத்திற்குப் பேருபகாரமாயிருப்பதோடு உன் கணவன் ஒருகால் சண்டையிலிருந்து திரும்பிவந்தாலும் உன்னை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வான்... உனக்கே நல்லகாலம் பிறக்கலாம். ஆகையால்தான் இத்தனை வற்புறுத்துகிறேன். வேண்டுமாயின் என் சிறிய குமாரத்தியை உனக்குத் துணையாக உன்னேடு அனுப்புகிறேன். அவளுக்கு நீ நன்ருக உன்னரிய சங்கீதத்தைச் சொல்லிக்கொடுத்து அவளையும் தயார் செய்துவிடு. உனக்கும் துணையும் பொழுதுபோக்குமாக இருக்கும்; அவளுக்கும் சங்கீதம்

வந்தமாதிரியாகும், சரிதானு...வேண்டாமென்று அசட்டுத்தனமாகச் சொல்லாதே'' என்று வெகு அன்போடு உபதேசம் செய்தார்.

அதைத் தட்டமாட்டது ஒப்புக்கொண்டாள். தனக்கு தங்கப்பதுமையை போன்ற குழந்தையிருக்கையில் அன்னியருடைய குழந்தையுடன் காலந்தள்ள வேண்டுமா! என்று நினைக்கும்போது துக்கம் பொங்கியது. குழந்தையைப் பார்த்து மாதக் கணக்காகிவிட்டதால் எப்படியாவது பார்க்கவேண்டுமென்கிற ஆவல் அபாரமாக எழுந்தது. எப்படியும் ஒருவார லீவு கிடைக்கும். அப்போது நேரே தன் ஊருக்குப்போய் அங்கிருக்கும் நிலைமைகளைப் பார்த்துக்கொண்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வந்துவிடலாமா என்று யோசித்தாள். 'கட்டாயம் குழந்தையைக் கொண்டுவந்து விடுவதுதான் சரி. ஏன் அந்த ஒரு சுகத்தையும் அனுபவிக்காமல் இழக்கவேண்டும்' என்கிற எண்ணம் தீவிரமாக உதித்ததால் அதற்கானபடியே முடிவு கட்டிக்கொண்டாள்.

மாற்றலுக்காக ஒருவாரம் லீவு கிடைத்ததும் தான் முன்பு இருந்த ஊருக்குப்போய் பார்த்துவருவதாகக் கூறிவிட்டு உடனே புறப்பட்டாள். "ஆறுமாத காலமாகிவிட்டதால் அங்கு என்னவிதத்தில் இருக்கிறதோ! யார் யார் எப்படி நடந்துகொள்வார்களோ! புதிய மனைவி எங்கிருக்கிறுளோ! கணவன் இல்லாத சமயமாகப் பார்த்துப்போகவேண்டும்'' என்றெல்லாம் மனத்தில் கோட்டை கட்டியவாறு ரயில் ப்ரயாணத்தை முடித்துக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தாள். இடம் நெருங்க நெருங்க அவளது குலைப்பும் திகிலும் அதிகரித்து ஒருவிதமான துக்கமும் கூடி வதைக்கின்றது.

அப்பொழுது நன்ருக இருட்டிவிட்டது. நல்லவேளையாக அமாவாசை கருக்கலானதால் இவளை யாரும் எளிதில் கண்டுகொள்ளமுடியாதவாறிருந்தது. தன் குழந்தையைப் பார்க்கப்போகும் பேரானந்தம் ஒருபுறம் கொந்தளிக்கின்றது. வேதனையும் ஒருபுறம் வாட்டுகின்றது. சஞ்சலப்பட்டலையும் மனத்துடன் வீட்டின் முன்புறம் மெல்ல எட்டிப்பார்த்தாள்.

எங்கு பார்த்தாலும் நறுமணங்கமழும் புஷ்பச் செடிகளின் அத்புதமான சிங்காரத்தோற்றமும் புஷ்பங்களின் பரிமளமும் தூரத்தில் வரும்போதே உள்ளத்தைப் புலகிதமுறச் செய்யும். விளக்குகளின் ஒளி கண்குளிரப் பேரானந்தமாக இருக்கும். வீதி கேட்டருகில் நின்று பார்க்கும்போதே உள்புறமுள்ள ஹால் வெகு அலங்காரமாயும் லக்ஷ்மீ கடாக்ஷம் நிறைந்ததாயும் காணப்படும்.

அதற்கு நேர் விரோதமாக தோட்டம் அலங்கோலமாகக் கிடப்பதையும் உள்ளே விளக்குகள் ப்ரகாசமாகக் காணுது முணுக்கு முணுக்கு என்று எரிவதையும் வீடே சோபையற்றுப் பாழும் வீடுபோலும், விகல்பமான சாவு வீடு போலும் காணப்படுவதையும் அதிக வேலைக்காரர்களோ மற்ற ஆட்களோ நடமாட்டமின்றி இருப்பதையுங் கண்டு இன்னதென்று கூறத்திறமற்ற திகிலுடன் நடுங்கினுள்.

உள்ளே தைரியமாகப் போவதற்கும் மனது இடங் கொடுக்கவில்லை. போனுல் யாருக்கு என்ன ஆபத்து என்று அவச்சொல் காதில் விழுந்துவிடுமோ! அல்லது தன் கண்மணி ப்ரேமாமணிக்கு, ஏதாவது...என்று நினைக்கும்போதே க்ருபாவதியின் வயிற்றில் தாங்கமுடியாத சங்கடம் செய்து வாட்டுகிறது. கால் பின்னலிட்டு மூச்சுத் துரத்துகிறது.

அப்படியும் இப்படியும் எட்டிப் பார்த்துக்கொண்டே போகும்போது வேலைக்காரன் ஒருவன் வீதியை நோக்கிவருவதைக் கண்டு சற்று சமாளித்துக் கொண்டு நின்று அவனை உற்றுப்பார்த்தான். அவன் புதிய ஆளாகக் காணப்பட்டதால் தைரியத்துடன் அவனை நோக்கி, "ஏண்டாப்பா! வீட்டு எஜமானர் இருக்கிருரா!'' என்ருள்.

அந்த புதிய வேலைக்காரனுக்கு க்ருபாவதி யாரென்றே தெரியாதாகையால் அவனுக்கு எவ்விதமான சந்தேகமும் உண்டாகவில்லை. அவன் சற்று ஏளன

த்வனியில் ''எஜமானரா!... இந்த வூட்டுக்கு எஜமானர் யாரு இருக்காங்க... எஜமானியம்மாதான் கெழவி இருக்கிறுங்க... பெரிய ஐயா எங்கேயோ ஓடிப்பூட்டாராம்... சின்னய்யாவுக்குதான் மொதல் பொண்டாட்டி மகாபாவி, ராஜாவாட்டமா இருக்கற புருசனே உட்டுட்டு ஓடிப்பூட்டாளாம். அவரு ரெண்டாங் கல்யாணம் பண்ணிக்கிறாராம்.

அப்பவே அவங்க ரெண்டுபேரும் வெளியே எங்கேயோ ஊருக்குப் பூட்டாங்களாம். அப்பறம் ஒருதபா வந்து கொயந்தெயேகூட தூக்கிகினுப் பூட்டாங்களாம். நானு அதக்கப்பறந்தான் வந்தேன். பெரியம்மாதான் பயித்தியக்காரியாட்டம் கெடக்குது. பெரிய ஐயா போன எடமும் தெரியலே... செலபேர் பெரிய ஐயா சாமியாரா ஆயிட்டாருன்று சொல்ராங்களாம், சிலபேர் வேறேகூட இன்னமோ சொல்ராங்களாம். ஒன்னும் புரியலே. பெரியம்மா பாவம் கொயந்தெ இல்லாமே அழுது அழுது சாகறாங்க. கொயந்தை எப்படி இருக்குதோ! தெரியாதாம், சின்ன ஐயா இங்கு வாரதே இல்லே. இத்தனைக்கும் காரணம் அந்த ஓடிப்போன மூதேவிதானும்'' என்று தானே கடகடவென்று ராமாயணத்தைக் கூறி முடித்துவிட்டான்.

183084

ஐயோ பாவம்! இதைக் கேட்கும்போது அவளுக்கு எப்படித்தான் இருக்கும்? தன்னை வேண்டுமென்று தள்ளியதுமல்லாமல் பயித்தியக்காரியாக நடிக்கச் செய்து வேடிக்கை பார்த்ததுமின்றி இப்படியா வேறு படாப்பழியாய் அபாண்ட மலையைப் புரட்டியிருக்கிறார்கள்... ஐயோ! இந்த அனியாயத்தைக் கூடவா கடவுள் பொறுத்துக்கொண்டிருக்கிறார்... மகமாயி! நீ கூடவா இன்னும் இந்த விபரீதத்தை வேடிக்கை பார்க்கிறாய். ஐயோ! உன் வீரமும் சக்தியும் எங்கே அழிந்துபோய்விட்டது!'' என்று தனக்குள் மகத்தான சோகத்தையும் கோபத்தையும் அடைந்து தத்தளித்தவாறு தம்பித்துவிட்டாள்.

வேலைக்காரனிடம் ஏன் பேச்சுக் கொடுக்கவேண்டும்? விஷயம் என்னவோ விளங்கிவிட்டது. உள்ளேபோய் அந்த மகாபாவியை எதற்குப் பார்க்கவேண்டும்? நமது பூஜா தேவதையான மூர்த்தியும் இங்கில்லை. இன்பக்கிளியான செல்வமும் இல்லை. நம்மை இந்த கதிக்கு ஆளாக்கியவளைப் போய்பார்ப்பானேன்! அவள் ஆத்திரத்தில் இந்த வேலைக்காரர்களுக்கு முன்பு இத்தகைய ஆபாசங்களை நேரில் கூறித் திட்டி சாபமிட்டு நான்தான் மருமகள் என்பதை விளம்பரம் செய்ய இடங்கொடுப்பானேன், விதியை எண்ணி, வந்த வழியே போய்விட்டால் என்ன?''... என்று எண்ணித்துடிக்கிறாள். தனக்குப்பிதாவைப்போலவேஇருக்கும் மாமனரைப்பற்றிய விஷயம் அவளைப் பின்னும் வேதனையிலாழ்த்தியது; தன்னுடைய விசனத்தினால்தான் அவர் இத்தகைய விதிக்கு ஆளாகிவிட்டார் என்று அவள் மனத்தில் சடக்கென்று தோன்றியது. ''ஐயோ! நாம் ஒருவர் கண்ணிலும் படாது தலைமறைவாய் கொஞ்சகாலம் தள்ளினால் பிறகு என் செல்வத்தை எடுத்துக்கொண்டு போய்விடலாம் என்று நான் எண்ணி வனவாசம் செய்வது போல் என் விதியைத் துலைக்கையில் மறைந்துவந்த அம்பு மார்பில் பாய்ந்தது. என்கிருப்போல் என்மீது இப்படியா பாயவேண்டும்?'' என்று கதிகலங்கினாள்.

''ஏன் நமக்கென்ன இனி மானமும் அவமானமும் வந்திருக்கிறது! என் பதியின் சுகத்திற்காக நான் பைத்தியக்காரியாகப் பலபேர் பார்க்க நடித்த பிறகு வெட்கமென்ன, துக்கமென்ன? எனது இதய சுத்தியை... அதோ! அந்த ஆண்டவன்... அந்த மகமாயித் தாய் பார்த்து கூலிகொடுக்கவேண்டும். என்னைப் போன்ற சாதாரண அல்ப மனுஷியிடம் நான் ஏன் பயப்படவேண்டும்? நேருக்கு நேர் உள்ளேபோய் வயித்தெறிச்சல் தீரச் சண்டைபோட்டுவிட்டுத்தான் போனால் என்ன!... இத்தகைய அஞ்சா நெஞ்சம் படைத்த ராக்ஷஸி என்னதான் சொல்கிறாளோ பார்க்கலாமே! என்னை விழுங்கியாவிடுவாள்! அதற்கும் நான் தலையிடத் தயாராகத்தானிருக்கிறேன்'' என்று ஒரு ஆவேசம் கிளம்பிக் காட்டு வெள்ளம்போல் பொங்கியது.

முதலில் தீர்மானித்த அளவைவிட அதிகமான எழுத்தாளர்களுக்கும் படங்களுக்கும் இடமளிப்பதால் மலர் எதிர்பார்த்ததை விடப் பெரிதாக வளர்ந்துவிட்டது. எமக்கு அடக்கவிலை மிக அதிகமாகிவிடினும், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட குறைந்த விலைத் திட்டம் மாற்றப்படவில்லை.

உங்களுக்கு கண்டிப்பாக மலர் கிடைக்கவேண்டுமாயின் இம் மாதத்திலேயே குறைந்த விலையில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

இவ்விதழில் "தற்காலத் தமிழ் கவிதை" என்ற தலைப்பில் விமர்சனக் கட்டுரை வெளியாயிருக்கிறது. பல கவிகளைப்பற்றி தொடர்ச்சியாக ரஸமான விமர்சனங்களை உங்களுக்கு ஸ்ரீ. வி. ஆர். எம். செட்டியார் அளிப்பார். இத்தகைய அரிய தொகுதியை மோகினியில் ஆரம்பித்த அவருக்கு எமது வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

சென்ற 2 இதழ்களில் வெளியாகியுள்ள கவிதை மலர்களை ' ரஸித்துப் பலர் கடிதம் எழுதியிருப்பதற்கு சந்தோஷப்படுகிறோம். ஸ்ரீமான் பி. ஆர். ராஜசூடாமணி மோகினிக்கு அத்தகைய மலர்களைச் சூட்ட அன்புடன் முன்வந்ததற்கு எமது வந்தனத்தை யளிக்கிறோம். இனி ஒவ்வொரு இதழிலும் ஒரு புதிய கவிதை மலர் வெளிவருமென்பதை நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

அறிஞர்களின் ஆதரவு அதிகமாக ஆக, மோகினியும் நவ நவமான அலங்காரத்துடன் உங்களுக்கு விருந்தளிப்பாளல்லவா?

சிங்கப்பெருமாள் கோவில்
1—10—43

உங்களிடம் நன்றியுள்ள,
வை. மு. கோதைநாயகி.

மதிப்புரை — 4-ம் பக்கத் தொடர்ச்சி

காட்டியிருப்பது படிப்போரைப் பரவசமுறுத்துகிறது. எதை எழுதினாலும் அதன் மூலமாக ஒரு நீதியோ, படிப்பினையோ, பழக்கவழக்கமோ, புதியகருத்தோ புகட்டும்படி எழுவதுதான் ஆசிரியரின் திறமையைக் காட்டும். ஸ்ரீமதி ஜயலக்ஷ்மியம்மாள் தம் சிறு கதைகளில் மேற்குறித்த ஸாரங்களைப் பிழிந்து கொடுத்திருக்கிறார்கள். முக்யமாக "புஸ்தகம் அஸ்தலக்ஷணம்" என்கிறபடி ஒவ்வொரு பெண்மணிக்கும் இதுபோன்ற புத்தகங்கள் அவசியம்இருக்கவேண்டும்.ஒவ்வொருவரும் இதைப் படித்துத் தாம் திருப்தியடைவதோடு நில்லாமல் "நாமும் ஏன் இம்மாதிரி எழுதக்கூடாது?" என்கிற ஆர்வத்தை யடைந்து, அத்துறையில் முயற்சித்து வெற்றியடைய முன்வருவார்களென்று எதிர்பார்க்கிறேன். இதுபோன்ற பல புத்தகங்களை யெழுதி பெண் சமூகத்திற்கும் தேசத்திற்கும் தொண்டு புரியும்படியான திடகாத்திரத்தையும், தீர்க்காயுளையும் ஸர்வ மங்களத்தையும் அருளும்படி பகவானைப் பிரார்த்திக்கின்றேன்.

வை. மு. கோ

சென்னையிலுள்ள நேயர்கள்

● காலை 8-மணி முதல் மாலை 8-மணி வரை

நமது திருவல்லிக்கேணி ஆபீஸில் (26, தேரடித்தெரு) நமது பிரதிநிதியிடம் வருஷ சந்தா, ஆண்டு மலர் இரண்டுக்கும் பணம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவும். நமது நாவல்கள் அங்கு கிடைக்கும்.

சந்தா நேயர்கள் அவசியம் கவனிக்கவும்

இவ்வருட ஆரம்பத்தில் ரூ. 1—8—0 அனுப்பிய நேயர்கள், இவ்வாண்டு முடிவுவரை சஞ்சிகையைப் பெற இன்னும் 10 அணா செலுத்த வேண்டியிருப்பதால் அதை உடனே அனுப்பக்கோருகிறோம்.



புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது.

'ரிஷ்ய சிருங்கர்' தமிழ் படத்தில் பிரதம ஸ்திரீபாகம் வகித்தவரும், போப் பாண்டவரால் புகழப்பட்டவரும், இனிய சங்கீத சம்பத்துடையவருமான திறமை வாய்ந்த தென்னிந்திய நடிகை ஸ்ரீமதி வஸுந்தரா தேவி சொல்லுகிறார்.

"தனிப்பட்ட நறுமணத்திற்காக நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டியையே உபயோகிக்கிறேன்."

Vasundhara Devi.

நரஸூஸ் காபி

M N K.—16 7...

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL, B. O.